292

Regd. No. M. 2210

வருஷ சந்தா ரூ. 1-8-0

AUTHOR & PROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்

(MRS. V. M. PARTHASARATHY IYENGAR)

JEGAN MOHINI

ஜகன்மோகினி

மலர் 8 APRIL 1931 இதழ் 5



ஜ்ஜ11, M24JN
M31·8:5
210031

ஜகன்மோகினி ஆபீஸ்,
26, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, மதராஸ்.

தனிப் பிரதி அணா 3.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதியில் சஞ்சிகை வெளியாகும்

எட்டாவது ஆண்டு ! எட்டாவது ஆண்டு !!

ஜகன்மோகினி.

இதன் 8-வது ஆண்டு 1930ஞ டிசம்பர்ம முதல் ஆரம்பம். இதில் **ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால்** எழுதப்பட்ட **சாமளநாதன்** என்னும் அற்புதமான நாவலின் தொடர்ச்சியும், ஹாஸ்ய விநோதங்களும், அநுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவரும். இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலி யுள்பட ரூ. 1-8-0 தான். " **சாமளநாதன்** " சென்ற வாண்டின் எழாவது சஞ்சிகையிலிருந்து ஆரம்பமாதலால் புதிதாகச் சேரும் சந்தா நேயர்கள் அந்த ஆறு சஞ்சிகைகளுக்காக 12 **அணு** கூடச் சேர்த்து ரூ. 2¼ அனுப்பினால், அவற்றை அனுப்புகிறோம்.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை **வி. பியில் அனுப்புவதால் சந்தா நேயர்களுக்கு மூன்றணு அதிக செலவுண்டாகுமாதலால் முன்பண மனுப்புவதே நலம்.**

(2) சந்தா நேயர்கள் நமக்கு எழுதும் கடிதங்களில் **சந்தா நம்பரை** மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் **கடைசித் தேதியில்** நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 **தேதிக்குள்** கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு, **மூன்றணு ஸ்டாம்பு** அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும். 15 தேதிக்குமுன் சஞ்சிகை வரவில்லையென்று வரும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் **தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டும்.** அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

(5) நமக்கு ஏஜண்டுகள் இல்லாத இடங்களில் **ஐந்து சந்தாதார்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷ சஞ்சிகையை இனாமாகப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

மானேஜர்.

வந்தேமாதரம்

தேசபக்தர்களே!

தற்போது நமது தேசம் உள்ள நிலைமையும், பாரத மாதாவின் துயரமும், பாரத மாதாவின் விடுதலைக்காக அநேக சகோதரர்களும் சகோதரிகளும் ஜெயிலுக்குச் சென்றும் இன்னும் சிலர் தமது உயிரையும் கொடுத்தும் பாடுபட்டிருக்கும் விஷயங்களும் யாவரும் அறிந்ததே யாகும். தேசத் தொண்டர்கள் செய்து வரும் மகா ஆச்சரியமான தொண்டுகளின் பெருமை உலகமறிந்ததே யாகும். சென்ற பத்து வருட காலமாக எனக்குத் தேச பக்தியில் ஆசையும் ஆர்வமும் உண்டே யன்றி அதற்கான பாடு படும் திறனற்றிருந்தேன்; இருக்கிறேன். பாரத தேச மென்பது யாவருக்கும் பொதுவே யன்றிப் பிரிவு இல்லை. அத்தகைய நமது நாட்டின் நிலைமையைக் கண்டு அநேகர் அநேக விதமான உதவிகளைச் செய்து வருகிறார்கள். தற்போது சென்னையில் **ஸ்திரிகள் சுதேசி சங்கம்** என்று ஓர் சங்கம் ஒரு வருடகாலமாக ஓங்கி வளர்ந்து வருகின்றது. அச்சங்கத்தின் சார்பாக அநேக நற்காரியங்கள் நடை பெற்று வருவது யாவரும் அறிந்த விஷயம். அச் சங்கத்திலேயே ஓர் லைப்ரரி, வாசகசாலை முதலியனவும் வைக்கப் பட்டிருக்கின்றன. அதற்கு அநேகர் பல புத்தகங்களையும், பத்திரிகைகளையும் கொடுத்து உதவியிருக்கிறார்கள். நாமும் நமது புத்தகங்களையும், பத்திரிகையையும் கொடுத்திருக்கிறோம். அச் சங்கத்திலிருந்து அதன் அங்கத்தினர்களும், தேச பக்தி நிறைந்தவர்களுமான அநேகப் பெண்மணிகள் தினந்தோறும் அன்னிய ஆடை மறியல் செய்து வருகிறார்கள். இன்னும் எத்தனையோ விதமாக தேசத் தொண்டு புரிகிறார்கள். அவ்விஷயங்களில் என்னால் கூடிய வரையில் நானும் கலந்து உழைத்து வருகிறேன். சங்கத்திற்குப் பலவிதத்திலும் பணச் செலவுகள் அதிகமாவதால் அதற்கும் அநேகர் உதவி புரிந்து வருகிறார்கள். அந்த வழியில் ஒரு சிறு உதவியேனும் செய்ய வேண்டுமென்று என் மனத்தில் ஆர்வம் மிகுந்தபடியால் ஏதோ எனது சிற்றறிவுக்கு எட்டிய வரையில் சில **ஸ்வதேசிய கீர்த்தனைகளை** வரைந்திருக்கிறேன். அந்தக் கீர்த்தனைகளைப் பிரசுரம் செய்து அந்தப் புத்தகங்களை அந்த சங்கத்திற்கு அர்ப்பணஞ் செய்து விட்டேன். அதன் விலை **இரண்டணாதான்** தபாற் செலவு அரையணா சேர்த்து, **இரண்டரை அணா** ஆகிறது. தேச சேவையில் ஆசையுள்ள நேசர்கள் எல்லோரும் இச்சிறு தொகையை ஒரு பெரிதென நினைக்காது, தங்களாலான வரையில் தேசத்திற்கு உதவி செய்யும் நோக்கத்துடன் வாங்கி சுதேசி சங்கத்திற்குத் தமது ஆதரவை அளிக்க வேண்டுகிறேன்.

அச்சங்கத்திற்கே கொடுப்பதற்காக தேச பக்தியும், தெய்வ பக்தியும் புகட்டும் **"காந்தியின் தொண்டன்"** என்கிற ஒரு நாவலை வரைந்து வெளியிடத் தீர்மானித்து எழுத ஆரம்பித்திருக்கின்றேன். எப்பெருமானின் கருணை கடாக்ஷத்தால் அந்த நாவல் சீக்கிரத்திலேயே முடிவு பெற்றுத் தான் வெளி வந்துள்ள விஷயத்தைத் தங்களிடம் பறை சாற்றிக் கொண்டு வரும் என்று நம்புகிறேன். **யாவும் அவன் செயல்.** ஆதலால் வெளிவரும் நாளைக் குறிப்பிடவில்லை. தேசபக்தியுள்ள அனைவரும் இதற்கு உதவி புரிவீர்களென்று நம்புகிறேன். சுபம்.

காந்தி மகான் வாழ சாந்த குணம் சூழ
பாரத நாடு வாழ பாரத நேயர் வாழ

இங்ஙனம் தங்கள் சகோதரி,

வை. மு. கோதைநாயகி.

அரிய சந்தர்ப்பம் ஒரு மாதம் வரையில்

புது வருஷக் கொண்டாட்டம்

நமது புதிய சந்தா நேயர்களின் வேண்டுகோளுக் கிணங்கி, நமது சொந்த நாவல்களை மூன்று கட்டுகளாகப் பிரித்து ஐந்து ரூபாய் முன் பண மனுப்பிகிறவர்கட்கு அவர்கள் கேட்கும் ஒரு கட்டு தபாற் செலவின்றி அனுப்ப ஏற்பாடு செய்துள்ளோம். ரூ. 15. மொத்தமாக அனுப்புகிறவர்களுக்கு கீழ்க் கண்ட மூன்று கட்டுகளி லுள்ள புத்தகங்களுடன் "சுகந்தபுஷ்பம்" "கோபாலரத்னம்" "மாதவமணி" என்ற 3 நாவல்களும் இனமாக அனுப்பப்படும்.

1.	2.	3.
வைதேகி	பத்மசுந்தரன்	நவநீத கிருஷ்ணன்
சாருலோசனு	ராதாமணி	ருக்மிணீ காந்தன்
சண்பகவிஜயம்	கௌரீ முகுந்தன்	சாமளநாதன்
		வீர வஸந்தா

இனம் ஒரு வருஷ சஞ்சிகையும் இனம்
பல பரிசுகளும்

நாம் இச்சஞ்சிகையை ஆரம்பித்தது முதல் இதற்குள் நமது சந்தாதாரர்கள் படிப்படியாகப் பெருகி எமக்கு ஆதரவளித்து உற்சாகத்தை யுண்டாக்கியதற்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். இன்னும் பல்லாயிரக் கணக்கில் சந்தாதாரர்கள் சேர்ந்தாலன்றி சஞ்சிகையை நஷ்டமின்றி நடத்துவது கஷ்டமென்பது நேயர்கள் அறிந்த விஷயமாதலால் ஒவ்வொருவரும் சில புதிய சந்தாதார்களைச் சேர்த்துக்கொடுத்து உதவிபுரியும்படி கேட்டுக்கொள்கிறோம். அப்படிச் செய்பவர்களுக்குப் பிரதி உற்சாகமுண்டாவதற்காக கீழ்கண்டவாறு பரிசுகள் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். அன்பர்கள் இதை ஆமோதிப் பார்களென்று நம்புகிறோம்.

			பரிசு புத்தககள்
(1)	ஒரு புதிய சந்தாதாரைச் சேர்த்து முன்பண மனுப்புகிறவர்களுக்கு		மாதவமணி அல்லது அமிர்தமாலினி
(2)	2 புதிய சந்தாதார்களை	,,	வீரவஸந்தா
(3)	3 ,,	,,	கோபாலரத்னம்
(4)	4 ,,	,,	சுகந்தபுஷ்பம்
(5)	5 ,,	,,	கௌரீமுகுந்தன் அல்லது ஒரு வருஷ சஞ்சிகை
(6)	6 ,,	,,	சண்பகவிஜயம்
(7)	7 ,,	,,	நவநீதகிருஷ்ணன்
(8)	8 ,,	,,	வைதேகி அல்லது பத்மசுந்தரன் அல்லது ராதாமணி அல்லது சாருலோசனு

2/0031

'ஜகன்மோகினி' ஆபீஸ்
26. கோடித் தெரு, திருவல்லிக்கேணி
சென்னை.

ஆச்சர்யமான மாந்திரீகம் &
மாருதி உபாசி ஜோதிடம்

சிறந்த ஜோஸ்யர்

தங்கள் ஜாதகக் குறிப்பு அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

தருமநியாயமான கேள்விகள் 5-க்கு ரூ 1—0—0. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 0—4—0. ஒரு வருட பலன் தசா புக்தி அந்தர வாரியாக எழுதி யனுப்ப ரூ 5—0—0. ஒரு தசா பலன் எழுத ரூபா 5—0—0. துவாதச பர்வ பலன் எழுத 5—0—0. ஜாதகம் கணித்து லக்னம் புடம் செய்து ராசி அம்சம் பலன் குறித்தனுப்ப ரூ 2—0—0 மாருதி கவசம் ரக்ஷை ரூ 3—8—0 ஆயுள் வரை பலன் எழுத ரூ 25—0—0 எல்லா விவரங்கட்கும் விலாசம்.

A. கோவிந்த ராஜய்யர்,
Astrologer & Proprietor
மாருதி ஜோஸ்ய நிலையம்.
VALAVANUR. S. Arcot.

அறிக்கை.

அனேகர் சௌகர்யங்களை முன்னிட்டு கீழ்க்குறிப்பிட்ட புத்தக வியாபாரிகளை 1—5—31 முதல் எமது (Chief Agents) சீப் ஏஜண்டுகளாக நியமித்திருக்கிறோம்:—

The Little Flower Co,	தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
Book-sellers	புத்தக வியாபாரிகள்,
334, Thambu chetty street,	334, தம்பு செட்டித் தெருவு,
G. T., Madras.	சென்னை.

ஷியாரது விளம்பரம் ஒன்று மறு பக்கத்தில் வெளியிடப் பட்டிருக்கிறது.

26, தோடித் தெருவு,
திருவல்லிக்கேணி
சென்னை, 30—4—1931.

மானேஜர்,
"ஜகன்மோகினி" ஆபீஸ்

நண்பர்களுக்கு — — — — நல்ல சமாசாரம்.

1—5—31 முதல் பலர் சௌகர்யத்தை முன்னிட்டு நாம் ஷமது **'மோகினியின்' சீப் ஏஜண்டுகளாக** நியமிக்கப் பட்டிருக்கிறோம்.

புதிதாகச் சேருவோர் நம்மிடம் சந்தா செலுத்தி ரசீது பெறலாம்; பழைய நண்பரும், சென்னைக்கு வர நேரிட்டால், சந்தாத் தொகையை நம்மிடம் செலுத்தலாம்.

நண்பர்கள் தங்களுக்கு வேண்டிய நமது 'ஜகன்மோகினி' வெளியீடுகளுக்கும் சரி, அல்லது மற்ற எந்த புத்தகங்களுக்கும் சரி, "ஜகன்மோகினி" ஆபீஸிற்கேனும், எமக்கேனும் எழுதலாம்.

இதர புத்தகங்கள் வேண்டுவோர் கீழ்க்கண்ட விவரங்களைத் தெரிவிப்பது நலம்:—

1. புத்தகத்தின் முழுப் பெயர்.
2. எழுதியவர் பெயர்.
3. பிரசுரிப்பவர் முழு விலாஸம்.
4. விலை.

சிறிதளவு காலதாமதமுமின்றி நேயர்களின் கடிதங்களைக் கவனிப்போம். ஏதாவது விவரங்கள் மட்டும் அறிய விரும்புவோர் ரிப்ளை கார்டு எழுதுவது நலம்; உடனுக்குடன் தெளிவாக முழுப் பதில் எழுதுவோம்.

நேயர்களுக்குத் திருப்தி கொடுத்து நற்பெயர் வாங்குவதே நமது நோக்கம்.

Our address:
The Little Flower Co.,
Book-sellers,
334, Thambu Chetty Street
(within 50 yards from the Esplanade Tram line)
G. T. Madras

எமது விலாசம்:
தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
புத்தக வியாபாரிகள்,
334, தம்பு செட்டித் தெருவு,
சென்னை.

பரிசுகளின் விவரம்.

4.வது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா ந.

J. 35. Srimathi Janakam Ammal, Matunga.
K. 148. Mr. A. R. Kasi Chettiar, Puduvayal.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களுக்கும் 5-ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.

மானேஜர்

தாயின் மனக்கொதிப்பைக் கண்ட திலோத்தமா அவளை நோக்கி "அம்மா! ஏன் ஆத்திரப் படுகிறாய்? யார் யார் தலைவிதி எவ்வித மிருக்கிறதோ! அவ்வித மல்லவா நடக்கும். அதை விடுத்து வேறு வழியில் சுக மடையவேண்டு மென்றால் இப் பிறவியில் கிட்டுமா! நீ இத்தகைய விசன முறுவாய் என்றே நான் உனக்கு என் விஷயங்களைக் கூறாதிருந்தேன். பெற்ற மனம் பித்து என்பது நன்றாக அறிந்த பழமொழி யல்லவா! உன் மனக் கொதிப்பை நான் அறிவேன். இனி கவலைப்பட்டு ஆவதென்ன பயன்? என் பர்த்தா எத்தகைய வராயினும் அந்த அம்மாள் என்னை எவ்விதம் நடத்தியபோதிலும் நான் அவர்களின் கீழ் அடங்கி இருந்து என் காலத்தைக் கடத்தவேண்டுமே யன்றி வேறு வழி இல்லை. என்னுடைய பிறவியே துயருற்று இறக்க வேண்டியதாகி விடுமோ என்றும் நான் நினைக்கிறேன். அதற்காக நான் எந்த சமயம் எதுவரினும் அதை யனுபவிக்கத் தயா ராகவே இருக்கிறேன். என் சினேகிதைகளான ரங்கமணி, ஸாவித்திரி என்னும் இருவரின் தைரிய மொழிகளி னாலேயே நான் உயிர் வாழ்கிறேன். அம்மா! என் துயர் இம்மட்டுடன் விட்டதா! என்னைச் சார்ந்த நீங்களெல்லோரும் கெட்ட வர்களாம். கற்புக் குலைந்தவர்களாம். வாக்குத் தவறுகிறவர்களாம். எத்தனை விதந் தான் வாயில் வருகின்றதோ அவற்றை சற்றும் கூசாது கூறுகின் றார்கள். அதற்கு நான் பதில் கூறிவிட்டால் என்னுயிரே போய் விடும். நான் எதற்கும் வாய் திறவாது பொம்மையாகவே இருந்து என் வேலையை மட்டும் மெஷின் போலச் செய்து வருகிறேன். நீங்கள் இங்கிருந்து கடிதமே எழுதக் கூடாதாம். அவ்வாறு எழுதுவதற்கும் நான் பதில் விடுக்கலாகாதாம். என்னுடைய நிர்ப்பந்தம் ஒன்றிரண்டாயின் கூறலாம். நீங்கள் அழைத்ததற்கு என்னை யனுப்பவே அவர்கள் மனம் இசையவில்லை. பிறருடைய சிபார்சினால் அனுப்பினார்கள். நான் நாளை உதயத்திற்கு அங்

விசேஷமான புண்யகாலத்தில் எம்பெருமான் எழுந்தருளி தீர்த்தம் சாதிக்கும் கடற்கரையில் திரளான ஜனங்கள் கூடி குதூகலமாக ஸ்நானம் செய்யும் காட்சி வெகு அற்புதமாக இருக்கிறது. கடலின் எழிலே அச்சம யம் தனித்து விளங்குகின்றது.

இருக்கவேண்டுமாம். அதையும் என்னிடம் சொல்லி யனுப்பி இருக்கிறார்கள். இன்று ஒரு நாளைக்காக என்னை அழைத்து வந்ததே பிசகு. அம்மா! எனக்குள்ள எல்லா வேலைகளையும் நான் செய்து விட்டு மிச்சமுள்ள நேரத்தை நான் வீணாக்கவில்லை. எங்கள் வீட்டிற்குச் சமீபத்தில் இலவசப் பள்ளிக்கூடம் ஒன்று இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்தில் சென்று தையல் வேலை, பிரம்பு வேலை, இன்னும் மற்ற கை வேலைகளைக் கற்றுக்கொள்கிறேன். அந்த விஷயத்தில் என்னைத் தடை செய்யாதிருப்பது என் பாக்கியமென்று நினைக்கின்றேன். வீட்டைவிட்டு வெளியில் சென்றிருக்கும் வரையில் என் மனம்! மிகவும் நிம்மதியாக இருக்கும். பின்னர் வீட்டில் காலை வைத்ததும் மனம் அடையும் வேதனைக்கு ஓர் எல்லையே இல்லை. வீட்டில் என்ன சண்டை நடப்பினும் அந்த மகராஜியின் சட்டமே தீர்ப்பு. அவைகளைப்பற்றி என் பர்த்தா என்னவோ வாய் திறப்பதே இல்லை. அவருக்கு அவ்விஷயத்தில் ஒருவிதமான உணர்ச்சியோ, என் மீது இரக்கமோ ஒன்றுமே தோன்றுவதில்லை. என் முன்னிலையிலேயே அவ்விருவரும் ஒன்றுகூடி என்னைப்பற்றித் தங்கள் மனம்போன வரையில் திட்டுவார்கள். அவ்விஷயத்தில் நான் வாயைத் திறக்கவே மாட்டேன். நாங்கள் குடி இருக்கும் வீட்டுக்காரர்கள் இந்த அனியாயத்தைக் கண்டு, ஏதேனும் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், அதோடு அவர்கள் பிழைப்பதே துர்லபம். அவர்களையே நோக்கிச் சிறிதும் வாய் கூசாது நீ இவளை நேசித்திருப்பதை நான் அறிவேன். அதை வெட்கமின்றி வெளியில் காட்டிக்கொள்ளவும் வந்துவிட்டாயோ!" என்று தாறுமாறாகத் திட்டிச் சண்டைபிடித்து அப்போதே இராவோடு இராவாக அவ்வீட்டைக் காலி செய்துவிட்டு வேறு வீடு புகுவது வழக்கம்.

இவ்விதமே இதற்குள் பல வீடுகள் மாறியாகிவிட்டது. இப்போது கடைசியிலிருந்த வீட்டுக்காரர்கள் மிகவும் நல்லவர்கள். அவர்கள் என்மீது மிக்க பிரேமையுடன் நடந்துகொண்டார்கள். அவ்வீட்டுக்காரர் தன் வீட்டில் எந்த பக்ஷணங்கள், புஷ்பங்கள், காய்

இன்று* சிலர் செய்யும் காரியத்தைத் "தூஷிப்பவர்கள் தாங்களே அக்காரியத்தைச் சில காலஞ் சென்று செய்யும்படியாய்விடுகின்றது.

கறிகள் எது வாங்கிக்கொண்டுவந்த போதிலும் அதில் எனக்குக் கொடாது இருக்கவேமாட்டார்கள். நான் வாங்கிக்கொள்வதற்கு அஞ்சி சில சமயங்களில் மாட்டேன் என்று கூறினேன். அதற்கு என் மாமியார் என்னை நோக்கி "ஏண்டி உனக்கித்தனை அலக்ஷ்யம்? அவர் உன்னை பொருபொருட்டாக மதித்து ப்ரீதியுடன் கொடுக்கும் பண்டத்தை வாங்கிக்கொண்டால் உன் தலையிலுள்ள கிரீடம் விழுந்துவிடுமோ! பெரியாரை அலக்ஷியம் செய்தால் நல்ல கதிதான் கிடைக்கும்!" என்று திட்டினுள். அன்றுமுதல் அவள் வாய்க்குப் பயந்து அவைகளை வாங்கிக்கொள்ளத் தொடங்கினேன். எந்த நேரத்திலும் வாயில் வந்தவாறு என்னைத் திட்டும் என் மாமியார் தானே அவைகளை வாங்கிக் கொள்ளும்படியாகக் கூறிவிட்டுப் பின்னர் தானே "உனக்கென்னடி குறைவு? தலை நிறைய புஷ்பம், வயிறு நிறைய பக்ஷணம், வாய் நிறைய வார்த்தை எல்லாம் இலவசத்தி லேயே கிடைத்துவிடுகின்றன..அதனுல்தான் உனக்குத் திமிர் மிஞ்சி விட்டது. 'அயலார் வீட்டுப் பண்டமாயிற்றே!' என்கிற எண்ண மின்றி தினம் பிச்சை வாங்குவதுபோல வாங்குவதற்கு வெட்கமற்று விட்ட உனக்கு வேறு எந்த விஷயத்தில்தான் உடம்பில் சூடு, சாணை இருக்கும். எல்லாவற்றிலும் ஜெயித்தவள் நீ! பிறர் பொருளுக்கு இச்சைகொண்டு பறப்பதைவிட உயிரையே விடலாகுமே; வெட்கங் கெட்ட பிழைப்பு ஏன் பிழைக்கவேண்டும்?" என்று திட்டுவாள். இந்த வார்த்தைகளைக் கேட்டு என்னுள்ளம் பட்ட பாட்டைக் கூறவே திறமன்று. அம்புபோன்ற அச் சொல்லைக் கேட்டு எதிர்த்துப் பேசி விட்டாலோ, என்னுயிரே என்னுடைய தல்ல. தக்ஷணமே எமனி டம் செல்லும் வண்ணமாக அடியும் குட்டும் என் ப்ராண தேவதை மூலம் வேண்டியது கிடைத்துவிடும். இதற்காகப் பயந்து ஏதும் பேசாதிருந்து விடுவதோடு, வழக்கம்போல வாங்கிக் கொள்ளும் பொருளை வேண்டாமென்றால் அதற்கு மீண்டும் கோபம் பொங்கி எழுந்து "ஏண்டி, தடிச்சிறுக்கி! உனக்குப் பெற்ற பிதாவைப்போல

சிலர் செய்யும் காரியம் பார்ப்பதற்குச் சரியில்லைபோ லிருக்கலாம்; ஆனல் அவர்களுடைய மனேபாவம் பரிசுத்தமானதாக விருக்கலாம். ஆதலால் பின் னர் அவர்கள் செய்தது சரியென்று ஒப்புக்கொள்ளும் காலம் வந்துவிடும்.

வாங்கிக் கொடுப்பதை வேண்டாமென்று தடுக்கின்றாயே! உனக்குள்ள திமிர் இவ்வளவுதானா, இன்னமும் உள்ளதா? நீ செய்யும் பிடிவாதத்தில் என் தலைக்குக் கல்லைத் தேடப் பார்க்கிறாயோ! மாமியாரிடம் நடுங்கும் மருகிகள் செய்யும் சாகஸத்தை நீயும் கற்றுக் கொண்டு நடிக்கப் போகிறாயோ? உனக்கு அவ்வாறு நடித்தலுக்குக் கூட பொருத்தம் உண்டாகாது." என்று கண்டபடி பேசுவாள். இவ்விதமே ஏறினால் அபராதம், இறங்கினால் குற்றம் என்ற நிலைமையில் நான் பட்டபாடு கொஞ்ச நஞ்ச மன்று. அத் தருணத்தில் நான் என்னுயிரையும் விடத் துணிவேன்.

இவ் விதமான வார்த்தைகளுக்கு நடுங்கி அவைகளை மீண்டும் வாங்கிக் கொள்ளத் தொடங்கினேன். அந்த மனிதன் மனத்தில் உண்மையில் எந்த விதமான எண்ண மிருந்த தென்பதை நான் அறியமாட்டேன். கபடமற்ற மனத்துடன் தான் எனக்கு அவ்வாறு கொடுத்து வந்தானோ! அன்றி, கபடத்துடன் தான் செய்தானோ? அதை அப்போதறியேன். "திலோத்தமாவை என் மகளைப்போல நான் நினைக்கிறேன்" என்று அடிக்கடி கூறுவான். இவ்விதமே சில மாதங்கள் நடந்தது. ஒருநாள் ரோஜா புஷ்பமும், மல்லிகைப் புஷ்பமும் எனக்கு வாங்கிக் கொடுத்தான். அதை நான் வழக்கம் போல தலையில் அணிந்தேன். அது சிறிது நேரத்திற்கெல்லாம் கீழே விழுந்து விட்டது; அதை நான் கவனிக்க வில்லை. எனக்கு வாங்கிக் கொடுத்த மனிதன் அதைக் கவனித்து எடுத்து எனக்குத் தெரியாமல் என் சிகையில் சூட்டினான். அப்போது, நான் பிரம்புக்கூடை பின்னிக் கொண்டிருந்தேன். எனக்குப் பின் புறமாக அவன் செய்த வேலையை நான் கவனிக்க வில்லை. என் தலையில் பூவை வைத்தது அவ் வீட்டுப் பெண் என்று நினைத்தேன். அந்த மனிதன், என் தலையில் வைத்து விட்டு, உடனே பக்கத்து அறைக்குச் சென்று விட்டான்.

"அவர்கள் இவ்வளவு அநியாயஞ் செய்தும் தண்டனை யடையவில்லையே! ஆகையால் கடவுள் இல்லை" என்று சிலர் பொறுமையை இழந்து கூறி விடுகிறார்கள். ஆனால் அவர்கள் கண்ணெதிரிலேயே, கூடிய சீக்கிரத்தில் **"தெய்வம் நின்று கொல்லும்"** என்கிற பழமொழிப்படி அதோகதி யடைந்து விடுவதைக் கண்ட பின்னர் ஆஸ்திக புத்தி திரும்பிவிடுகின்றது

நான் இதையெல்லாம் அப்போது அறியேன். கூடைமீதே கவனமாக இருந்தேன். மேலும் இவ்விதம் மனத்துணிவுடன் என் தலையில் அவன் புஷ்பத்தை வைப்பான் என்று நான் கனவிலும் கருதவில்லை. ஆகையினால் இதைப்பற்றி வித்தியாசமாக எண்ணாது பேசாதிருந்துவிட்டேன். இந்த அனியாயச் செய்கையை என் மாமியாரும், என் பர்த்தாவும் தூரவிருந்து கவனித்திருக்கிறார்கள். இதையும் நான் அறியேன். அன்று அவர்கள் என்னிடம் வித்தியாசமாகவே நடந்துகொண்டார்கள். அவர்கள் வழக்கமே இதுதான் என்று நான் எப்போதும்போல இருந்துவிட்டேன். அன்றிரவு இவர்களிருவரும் எங்கேயோ நாடகத்திற்குச் செல்லப் போவதாயும் வருவதற்கு நேரமாகும் என்றும் அதுவரையில் என்னை வீட்டுக்காரர்களுடன் படுத்துக்கொள்ளும்படிக்கும் கூறினார்கள். இதையும் நான் நிச்சயமென்றே நம்பினேன். வீட்டுக்காரிடம் இதைத் தெரிவித்தேன். அந்த அம்மாள் அதற்கு ஒப்புக்கொண்டாள். பிறகு என் ;வேலையை முடித்துக்கொண்டு அங்கு சென்று அவர்களுடன் படுக்கையில் படுத்தேன். வீட்டுக்காரர்களின் மகள் தன் புருடனுடன் தனி விடுதியில் சென்று சயனித்துக் கொண்டாள். வீட்டுக்காரம்மாள் எனக்காக தனியாகப் படுக்க வந்தாள். என் புருஷனும் மாமியாரும் வெளியில் சென்றுவிட்டார்கள்.

வீட்டுக்காரம்மாள் உண்மையில் மிக்க நல்லவள். அவளுடைய உத்தமமான குணத்தைக் சிறியவளாகிய நான் நன்கறிவேன். நான் அந்தம்மாளுடன் படுத்ததும் அந்த வீட்டுக்காரன் அவர்கள்மீது சிடுசிடுத்து கோபித்துக்கொண்டே இருந்தான். இதற்குரிய காரணத்தை நானறியமாட்டேன். சற்று நேரத்தில் அந்தம்மாள் என்னைத் தனிமையில் கொல்லைப்புறத்திற்கு அழைத்துச் சென்று, 'திலோத்தமா! உனக்கு நான் பெற்ற அன்னையாகவிருந்து சில வார்த்தைகளைக் கூறப்போகிறேன். அவைகளை நீ

"நமக்குப் பலர் சிநேகமாயிருக்க வேண்டும்; அவர்களால் நாம் அநேக நன்மைகளை அடையவேண்டும்" என்று எண்ணுபவர்கள் சிலர், ஆனால் அவர்கள் மற்றவர்களிடத்தில் 'உண்மையான சிநேக பாவம் இல்லாமலிருக்கிறவரையில் அவர்கள் உருப்படப் போவதில்லை.

வித்தியாசமாக எண்ணுமல் கேட்கவேண்டும். யாருக்கும் பொது வில் கடவுளிருக்கிறுர். நியாயமும் இருக்கிறது. அதற்கு என்றும் அழிவில்லை. அக்கிரமத்திற்கும், மோசத்திற்கும்தான் அழிவு உண்டு. தன் வீட்டு விளக்காலுல்மட்டும் வாயைச் சுட்டுவிடாது என்று கூற முடியுமா? நெருப்பைத் தொட்டால் எந்த வீட்டுதாயினும் எரித்தே தீரும். அதுபோல எனது அனியாயத்தை என் மனம் அறியும். நான் அதை மறைக்க முயன்ருலும் கடவுள் மறைக்கமாட்டார். அவர்க்குச் சகலமும் ஒன்று தான். ஆகையினுல் அவருக்குப் பொதுவாக நான் நடக்கின்றேன். நீயோ பெருத்த பதினுடி வேங்கை யிடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் சிறிய மானைப் போலிருக்கின்றுய். உனக்கோ கேவலம் சிறிய வயது. உன் னுடைய சிறிய பிராயத்தையும் நிலைமையையும் கவனித்தால் விவாகம் செய்வதற்கே இன்னும் தகுதி யில்லை எனலாம். அத் தகைய உன்னை அவர்கள் செய்யும் கொடுமையைக் கண்டால் சண்டாளரின் மனமும் நடுங்கும். அவர்களிடம் நீ இதுபரியந்தம் ஜெயித்து வருவது உன் சாமர்த்திய மென்றே கூறலாம். உன் னுடைய போதாக் காலத்தினுல் இந்த இடத்தில் நீ வந்து வாழ்க் கைப் பட்டாய். உனக்கு, என் பர்த்தா தினம் புஷ்பம் முதலியன வாங்கிக் கொடுப்பது முற்றும் அவர் மனத்தில் கொண்டுள்ள விகல்ப எண்ணத்தினுல் என்பதை நான் அறிவேன். அவருடைய சகலமான குணத்தையும் நான் தெரிந்துகொண் டிருப்பதுபோல இனி யாரும் தெரிந்து கொள்ள முடியாது. அவர் மகா சிற்றின் பப் பித்தர். சதா சித்தக் கலக்க முள்ளவர். எந்தப் பெண்களைப் பார்த்தாலும் அவர் சற்று நின்று அவர்களது முகத்தை உற்றுப் பார்ப்பார். பெண் பித்துகொண்ட சகபாடிகளின் சகவாஸமே

தெய்வபக்தியும், தேச பக்தியும் நிறைந்தவர்களின் உபந்யாசங்களைக் கேட்கும்போதோ அவர்களைவிட உன்னதமான நிலைமைக்குத் தான் வர வேண்டுமென்கிற ஆவல், பிறகோ சுபாவமாக உள்ள சோம்பேறித்தனம் எல்லாவற்றையும் கெடுத்துவிடுகின்றது. கடவுள் நமக்கு அளித்த அருமையான காலத்தை உண்பதிலும் உறங்குவதிலும் போக்குவது. கழிந்து போன நாட்கள் திரும்பி வருமோ?

அவருக்கு நிறைந்திருக்கிறது. சதா பேசுவதெல்லாம் காமாந்தகாரமான விஷயங்களே யாகும். சித்த சுத்தி என்பது அவருக்கு மருந்திற்கு மில்லை. அவருடைய அருவருக்கத் தக்க விஷயங்களை எல்லாம் சகித்துக்கொண்டு, தலைவிதி என்று நினைத்து நான் இத்தனை நாளாக இங்குக் குடும்பத்தி லிருக்கிறேன். நான் இவ்விதம் நோயாளியாகியதற்குக் காரணம் அவரே அன்றி வேறில்லை. என் தங்கையை நான் ஒரு மாதகாலம் என்னிடம் அழைத்து வைத்துக் கொண்டிருந்தேன். அவளை என் பர்த்தா நடத்திய மாதிரியையும், பிறகு அவளைக் கெடுக்க தீர்மானித்த சூழ்ச்சியையும் கூறத் திறமன்று. அவள் உடனே என்னை விட்டு ஊருக்குப் போய்விட்டாள். இன்னும் இதுபரியந்தம் அவள் ஓர் விவாகத்திற்குக் கூட இவ் வீட் வீட்டிற்கு வருவதில்லை.

இந்த இராமாயணங்கள் கிடக்கட்டும். உன் விஷயத்தில் என் பர்த்தாவின் எண்ணம் முழு மோசமாக விருக்கிறது. உன்னைத் தனக்கு அடிமையாக்கிக் கொள்வதிலேயே அவர் நினைவு இருக்கிறது. உன் கணவனும் அந்தக் கழுதை முண்டையும் அதற்கு அனுகூலமாகவே இருக்கிறார்கள் என்பதை நான் சில சந்தர்ப்பங்களிலிருந்து நன்றாகத் தெரிந்துகொண்டேன். அவர்கள் உள்கையாக விருந்தே உன்னை அனியாயம் செய்யப் போகிறார்கள். என் பர்த்தாவுக்கு நான் ஆதி முதல் எடுத்துரைத்த நீதி எல்லாம் வீணாகிவிட்டது. அவர் மனப்போக்கிற்கு மாறாக நடக்கவே இல்லை. அவருடைய மதியைக் கடவுள்தான் திருப்ப வேண்டுமே யன்றி மனிதரால் ஆகாது என்பதை அறிந்து விட்டேன். நீ நல்ல பெண்ணாகவிருப்பதால் உனக்கு நான் உண்மையை எடுத்துரைக்கின்றேன் நீ, எந்த விதத்திலாவது உபாயம் செய்து, உன்னை நீ காப்பாற்றிக் கொள். அவர்கள் உன்னைக் கேவலமாக்கிவிடத் தீர்மானித்து விட்

'ஓர் அருமையான கிரந்தத்தை வாசிக்கும் போது, அதில் எந்த இடத்தில், நமக்குப் பொருள் புலப்படாமல் சந்தேகம் உண்டாகிறதோ, அந்த சமயத்தில் நமது மனம் பரிசுத்தமாக; இருக்குமானால் நிச்சயம் நாம் செய்கிற—நமக்குத் தோன்றுகிற—பொருளே அதன் உண்மையான அர்த்தமாகவும் கவிதாவின் உள்ளக் கிடக்கையாகவும் இருக்கும்'' (காளிதாஸன்.)

டார்கள். இந்த வீட்டை விட்டு வெளியேறிவிடின் இந்த ஆபத்திற்குத் தப்பலாம். இன்று அவர்கள் நாடகத்திற்குச் செல்லவில்லை. வேண்டுமென்றே இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் சதியாலோசனையை நானறிவேன். நீ இனிமேல் நடந்து கொள்ளும் வழியைத் தேடிக்கொள்ளம்மா! கண்ணீர் விட்டுக் கவலைப்படாதே!'' என்று எனக்கு உண்மையை வாஞ்சையோடு கூறி விட்டாள்.

இந்த வார்த்தையைக் கேட்ட என்னுள்ளம் துடிக்கும்—துடித்த—கண்றாவியை என்னென்பேன். அந்த விடத்திலேயே அப்படியே ப்ரமை கொண்டு நின்று விட்டேன். என்னிலைமையே எனக்கு மாறி விட்டது. என் இதயம் கோடை இடி என இடிக்க ஆரம்பித்தது. நான் தேம்பித் தேம்பி அழுதேன். நான் எந்தவிதம் தப்புவது என்று பெருத்த யோசனையிலாழ்ந்தேன். உடனே அந்தம்மாளின் பாதத்தில் விழுந்து, 'அம்மா! என்னுடைய பெற்ற அன்னை இருந்தும் தற்போது எனது தாயார் நீங்கள்தான். எனக்கு நேர விருந்த பேராபத்தை எடுத்துக் கூறி என்னை எச்சரிக்கை செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன். இச் சங்கடத்தினின்றும் நான் எங்ஙனம் தப்புவேன். என் விதியே என்னை இங்கு கொண்டு மடித்தது. என்னுயிர் நீங்கி விடலாகாதா ? அதுவும் காணவில்லையே! கற்பு குலைந்த பிறகு உயிர் தரித்திருப்பதில் பயன் என்ன? ஆ! நான் என்ன செய்வேன்....அம்மா! இப்போது இராக்காலமாகையினால் நான் எங்கும் வெளியில் செல்வதற்குமில்லை. வேறு தப்புவதற்கும் மார்க்கமில்லை. ஆகையினால் நான் வீட்டு விலக்கமென்று கூறி அந்த விடுதியில் புகுந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு படுத்து விடுகிறேன். பிறகு என்ன நடக்கிறதோ! பார்க்கலாம்' என்று கூறினேன்.

ஒன்றுமே சந்திப்பும், அழைப்பும் இல்லாதிருக்கையில் எங்கும் வெகு நிசப்தமாக இருக்கிறது. ஒரு இடத்திற்குப் பிரயாணம் ஏற்பட்டால் அடுத்து அடுத்து ஒரே நாளில் பல இடங்களுக்கு ஏக நேர்ந்து விடுகின்றது. எதற்குச் செல்வது, எதை விடுவது?

அதற்கு அந்த அம்மாள் சம்மதித்தார்கள். உடனே நான் சொல்லியது போலவே செய்து விட்டேன். வெளிப் பக்கத்து அறையில் சென்று கதவை தாளிட்டுக் கொண்டுக் கடவுளின் மீது சித்தத்தைச் செலுத்தித் தோத்திரம் செய்தவாறே படுத்துவிட்டேன். என்ன ஆபத்து வருமோ! என்ன நடக்குமோ! என்று என் மனம் பட்டபாட்டைக் கூறத்திறமன்று. அத்தகைய திகிலுடன் என் பொழுதைக் கடத்துகையில் என் பர்த்தாவும் மாமியாரும் வந்தார்கள். என்னை உண்மையிலேயே வீட்டு விலக்கம் என்று எண்ணி விட்டார்கள். அன்று பூராவும் கடவுளினருளால் ஒன்றுமில்லாமல் கழிந்தது. பிறகு எனக்கும் வீட்டுக்காரிக்கும் பெருத்த மனஸ்தாபம் நேர்ந்துவிட்டதுபோல நாங்கள் வேண்டுமென்று சண்டை செய்து வெளியார் பார்க்கும்படிக்கு தடபுடல் செய்து அந்தக் காரணத்தினால் வீட்டைவிட்டுக் கிளம்பினேம். வேறு வீடு சென்று சில மாதந்தான் ஆயிற்று. நீங்கள் இவ்வளவு படுத்திருப்பதாகத் தடபுடலான கடிதம் வரவே என்னை யனுப்பினார்கள். இல்லையேல் அனுப்பமாட்டார்கள். நான் என் மாமாவுடனேயே கள்ள நட்பு கொண்டிருக்கிறேனும், ஆகையினால் இந்த வீட்டுப் பக்கமே அனுப்பலாகாதாம். இதுபோல் அவர்கள் பேசும் வார்த்தை ஒன்றிரண்டல்ல. என்ன செய்வேன்? என் விதி இது. கடவுளிருக்கிறார் என்று நம்பி இருக்கிறேன். இப்போது இங்கும் அவர்கள் யாரேனும் வந்துவிடப்போகிறார்களே என்று எனக்கு பயமாகவே இருக்கிறது" என்றாள்.

இந்த அனியாயமான வரலாற்றைக் கேட்ட அவள் அன்னையின் மனம் இடிந்து போய் விட்டது. வாயில் வந்தவிதமெல்லாம் திட்டிப் புலம்பினாள். பிறகு திலோத்தமாவின் மாமா அங்கு போஜனம் செய்ய வந்தான். திலோத்தமாவின் தாயார் உண்மையிலேயே

தான் செய்து விட்ட எந்த குற்றத்தையும் யாரும் ஒப்புக் கொள்வது வெகு கடினம். மறைப்பதற்கும் மறுப்பதற்கிம் தான் முற்படுவார்கள் சிலர் தம் குற்றத்தைத் தாமே யொப்புக் கொண்டு வருந்துவதை நோக்கின் கூற வியலாத ஆச்சரியமும் அவர்களிடத்தில் நம்பிக்கையும் தானே உண்டாகி விடுகின்றது.

தேக அசௌகமாக விருப்பதால், அவனுக்கு திலோத்தமா பரிமாறச் சென்று, பரிமாறியவாறு ஏதோ பேசிக் கொண்டிருக்கையில் "சம்மந்தியம்மா! உடம்பு எவ்விதமிருக்கிறது?" என்று விசாரித்துக் கொண்டே திலோத்தமாவின் போலி மாமியார் வந்துவிட்டாள். அவளுடன் கூடவே கணவனும் வந்தான். அவ்விருவரும் திலோத்தமா அவள் மாமாவுக்குப் பரிமாறுவதையும் பேசவதையும் கண்டு வயிற்றெரிச்சலும் அடங்கா சீற்றமும் கொண்டு திலோத்தமாவை சபித்து விடுவார்களைப் போலப் பார்க்கலானார்கள். இப்பார்வையைக் கண்ட திலோத்தமாவின் மனோநிலையைக் கேட்க வேண்டுமா? அவள் கல்லாய்ச் சமைந்து நின்று விட்டாள்.

4-வது அதிகாரம்

துஷ்டரின் நட்பு கஷ்டத்தில் முடிபு

ஸாவித்ரியும் மதனகோபாலனும் எழும்பூர் ஸ்டேஷனை அடைந்தார்கள். அவ்விருவரின் மனத்தில் பல வேறு எண்ணங்கள் உதயமாகி அல்தமித்துக் கொண்டிருந்தன. ஸாவித்ரிக்கு இன்னதென்று தோன்றாது சங்கடமும், வருத்தமும் பொங்கி எழுகின்றது. அவள் மனத்தில் தன் கணவன் நகை விஷயத்தில் என்ன சொல்வாரோ என்கிற கவலையிருந்து அபாரமாகப் போராடுகின்றது. இன்னிலைமையில் ஸ்டேஷனை அடைந்த இருவரும் அங்குள்ள தடபுடலில் நாகசாமி எங்கிருப்பான் என்று தேடிக் கொண்டே வந்தார்கள். கூட்டம் மென்னியை அழுத்துகின்றது. எந்த திக்கில் நோக்கியபோதும் குதிரைப் பந்தயப் பேச்சு முழக்கமே யன்றி வேறு பேச்சு கிடையாது.

வித்வத் கோஷ்டியின் கூட்டத்தினழகும் அவர்களின் சம்பாஷணையின் எழிலும், மனோபாவங்களின் நன் மதிப்பும் பார்க்கப் பார்க்கப் பரவசமாகின்றது. அந்த அருமையை அனுபவித்தால் தான் தெரியும்.

இதைக் கண்ட மதனகோபாலன் "ஆகா! தமது பொருளை வெகு உற்சாகத்தோடு இழப்பதற்குச் செல்லும் பெருங் கூட்டத்தின் களிப்பை என்னென்பேன். என்ன அறியாமை! என்ன மதியீனம்! ஒரு காலணாவை தன் சொந்த தேக உழைப்பினால் சேகரிப்பதென்றால் எத்தனை பாடு பட்டு உழைக்க வேண்டும். கண்ணியமான முறையில் கால் காசு சம்பாதித்துக் கால் வயிற்றிற்குக் கஞ்சி குடித்தாலும்—பழைய அமுது புசித்தாலும்—எத்தனை ஆனந்தமாயும் எத்தனை மேன்மையாயும் இருக்கின்றது. இந்தப் பாவி நண்பர்கள் பிறர் பொருளைக் கவர்ந்து செல்வதன் மேலேயே நாட்டமாக விருந்து அவர்கள் கை வரளும் வரையில் அவர்களை விட்டுப்பிரியாதிருந்துப் பின் கை சளைத்துவிட்டதென்று தெரிந்தால் அவ்விடத்தை விட்டு அற்ற குளத்து அருநீர்ப் பறவையைப் போல் உற்ற நேசத்தையும், பற்றுதலாக நடித்ததையும் அறவே மறந்துபோய் விடுகிறார்கள். பிறகு தம் பொருட்டாகத் தான் இந்த மனிதன் கெட்டு விட்டான், கஷ்டப்பட்டு விட்டான் என்பதை அப்பாவிகள் ஒரு நிமிஷங் கூட நினைப்பதில்லை. 'அவர்கள் வேலையாயிற்று; விலகிச் சென்றார்கள்.' என்ற நீதியை நன்றாகக் காட்டி விடுகிறார்கள். நாகசாமியைச் சுற்றிக் கொண்டு நான்கு பேர்கள் நிற்பதைக் கண்டால் என் மனம் கொதிக்கின்றதே. என்ன குசாலாகப் பேசி மகிழுகின்றார்கள். உம், இவை எல்லாம் **கேடுவரும் பின்னே; மதி கெட்டுவரும் முன்னே.** என்ற பழமொழியை நிதர்சனமாகக் காட்டுகின்றன." என்று எண்ணி வருந்தியவாறு ஸாவித்ரியை நோக்கி "அம்மா ஸாவித்ரீ! அதோ அக் கூட்டத்து மத்தியில் உன் பர்த்தா நிற்கின்றான். அவனை அவ்விடத்திலேயே சந்திக்கலாகுமா! அன்றி இவ்விடத்திற்கு அழைக்கட்டுமா!" என்றான்.

இதுகேட்ட ஸாவித்ரி "அண்ணா! அங்கு அத்தனைக் கூட்டத்து முன்னிலையில் நாம் சென்று கேட்டால் அவருடைய செய்

கடவுள், சிலருக்கு அபாரமான புத்தியையும், கவித் திறத்தையும் அளித்தும் அவர்கள் செய்த கவியை அவர்களே பாடி ஆனந்திக்கவும், பிறர் கேட்டு மகிழவும் கூடிய சாரீரத்தை யளிக்காது குறைவு செய்துவிடுகிறார் அவரவர்கள் செய்த தவமிது தான் போலும்.

கையைப் பிறாபிந்து அவளைப் பரிகஸிக்க நேரும். அந்த விதமான அவமானத்தை நான் தேடவில்லை. நான் இங்கு வெயிடிங்கு ரூமில் இருக்கிறேன். நீங்கள் சென்று அழைத்துக் கொண்டு வாருங்கள்.'' என்று அப்போதும் பர்த்தாவின் மதிப்பைக் கண்ணியமுறச் செய்ய வேண்டியே சொன்னாள்.

இதுகேட்ட மதனகோபாலன் நாகசாமி இருக்கும் இடத்திற்குச் சென்று, "நாகசாமி!" என்று அழைத்தான். அப்போது தடபுடலான அட்டகாஸத்துடன் பேசிக் கொண்டிருந்த நாகசாமி அவனைக் கண்டதும் கட்டு மீறிய வெறுப்பும், அபாரமான ஆத்திரமும் அடைந்து தனது நிலையின் அவகேட்டை மறந்து நிரம்பவும் முடுக்காக நின்று சீற்றமுள்ள தோற்றத்துடன் அவனை உற்றுக் கவனித்தான். பிறகு "ஏன்! எதற்காக அழைத்தாய்?'' என்று ஒரு விதமான அலக்ஷியத்துடன் கேட்டான்.

மதன:—உன்னோடு சற்றுநேரம் பேசவேண்டும். மிகவும் முக்கியமான விஷயம். ஸாவித்ரியும் அங்கு வந்து காத்துக் கொண்டிருக்கிறாள்; ஆகையினால் நீ உடனே வா.

நாகசாமி:—என்ன! சாவித்ரி வந்து காத்துக்கொண் டிருக்கிறாளா? எதற்காக? நான் வெளியே சென்றால் அப்படியே இறந்து விடுவேன் என்று நினைத்துக் கொண்டாளா! அல்லது வீட்டிற்குத் திரும்பி வாராது எங்கேனும் ஓடிவிடுவேன் என்று நினைத்தாளா! பேஷ்; அவள் கூப்பிடுவதும் அழகு; நீ வந்து நிற்பதும் அழகு. பெண்பிள்ளைகள் மதியீனமாகப் பேசினால் அதை ஆண்பிள்ளையாகிய நீ கேட்டுக் கொண்டு வந்தது வெகு அழகு. போய்யா போ! எனக்கு ரயிலுக்கு நேரமாகி விட்டது.

சிலருக்கு எதேனும் தின்பண்டங்களைக் கொடுத்தால் அதை யவர்கள் உடனே வாங்கிக்கொள்ளாது, "வேண்டாம்; வேண்டாம்!" என்று பூதஞ்சி செய்கிறார்கள். அந்த சிலரே பிறகு "நான் அவர்கள் வீட்டில் ஒரு வஸ்துவைக் கூடக் கண்ணாலுங்காணவில்லை," என்று குறை கூறுகிறார்கள். இதென்ன குணமோ தெரியவில்லை.

மதன:—அப்பா! ஸாவித்ரி அழைத்ததும், நான் அழைத்ததும் தற்போதுள்ள உனது மன நிலைமைக்கு மிகவும் குற்றமாகவே தோன்றலாம். ஆனல் பின்னர் எக்காலத்திலாயினும் நீ இந்த நினைவை நினைக்காது அடியோடு மறக்கமாட்டாய்; மறக்கமுடியாது. உன் வாழ்நாளில் இந்த சம்பவத்தையே முக்கியமான நாளாகவும் நினைப்பாய். மணிவண்ணன் கதியைப் பார். அவ்விதம் தான் உலகத்தில் பெரும்பாலும் நடக்கின்றது. அபலை அங்கு காத்திருக்கிறள். ஒரு பேச்சு கேட்டுவிட்டுச் செல்லலாம்; வா.

நாகசாமி:—என்ன! எனக்கே பெரிய புத்தி புகட்ட வந்துவிட்டாயே. பேஷ்! வெகு அழகு. நான் இப்போது வரமுடியாது. ரயில் வரும் சமயமாகிவிட்டது; ஆகையினல் நான் திரும்பி வந்த பிறகு பேசிக் கொள்ளலாம். அந்த துஷ்டச் சிறுக்கிக்கு இத்தனை மனத் துணிபு வந்துவிட்டதா. ரயிலடிக்குமா என்னைத் தேடிக் கொண்டு வந்தாள்? இருக்கட்டும்.

மதன:—நாகசாமி! நீ இவைகளை எல்லாம் விளையாட்டுக் காரியமாக நினைக்கிருய்! இது விளையாட்டேயல்ல. நீ கட்டாயம் வந்து ஒரு வார்த்தை கேட்டுவிட்டுப் போனல் போதும். பேதையின் மனத்தை வாதனைக் குள்ளாக்காதே வா; என்னதான் நீ நடபுடலாகத் தற்போது இருப்பினும் அவள் உன்னை அக்கினி சாக்ஷியாக மணந்த பாவை என்பதை நீ நினைத்துக்கொள். மறந்து விடாதே. ஏழை யழுத கண்ணீர் கூரிய வாளை யொக்கும் என்ற பழமொழியை நினைத்துப் பார். ஒரு மனிதனுக்கு வாழ்க்கைப் பட்ட நங்கையின் கதியை அவளை மணந்தவன் கவனித்தல் கடமையே யன்றிப் பிறருக்கு அக் கனிகரம் ஒருபோதும் வராது. கணவனுடைய ஆபத்திற்கோ, சாபத்திற்கோ; நன்மைக்கோ, தீமைக்கோ; சுகத்திற்கோ துக்கத்திற்கோ எல்லாவற்றிற்கும் மனைவி தான் தன்னுயிரைக் கொடுத்துப் பகிர்ந்து அனுபவிக்கும் சக்தியும்

தேசீய விஷயத்தில் பாடு படுபவர்களைக் கண்டால் சிலர் அதையோர் இழிவாயும் கேவலமாயும் நினைத்துப் பேசுகிறார்கள். அவர்களுடைய மனத்தில் இத்தகைய அருமையான தேச பக்தி ஒரு பக்கத்தில் சிறிது பதுங்கிக் கிடக்குமாயின் அந்த அறிவிலிகள் அதை இழிவாகக் கூறுவார்களா!

உரிமையும் பெற்றவள். ஆகையினால் நீ நன்கு யோசித்துப் பார். நீ எல்லாம் தெரிந்தவன் என்று பேசிக்கொள்கிறாய். உன் மனைவியின் அழைப்பைத் திரஸ்கரிக்காதே. வந்து கேட்டுவிட்டுச் செல்லு." என்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்ட பிறகு தான் அவன் தன் சகபாடிகளை நோக்கி "நண்பர்காள்! இதோ வந்துவிடுகிறேன், இருங்கள்" என்று கூறிவிட்டு வெயிடிங்கு ரூமிற்கு வந்தான்.

அவனைக் கண்ட ஸாவித்ரி திடீரென்று எழுந்து, பாதத்தில் விழுந்து வணங்கி "பிராணநாதா! என் ப்ராணகாந்தா! தங்கள் முகத்தை நோக்குங்கால் என் மனம் பதறுகின்றதே! சீற்றமே உருக்கொண்ட தோற்ற மல்லவா தங்கள் முகத்தில் ஜொலிக்கின்றது! தாங்கள் எல்லாம் தெரிந்த உத்தமராயிற்றே. தங்கள்பால் நான் என்ன சொல்லப்போகிறேன். நான் பலமுறைகளில் பலவிதமாக உங்களுக்கு நீதிகளைப் போதித்திருக்கிறேன். அவைகளை நீங்கள் சிறிதும் செவியில் கொள்ளாது இந்தப் பாவிகளின் நேசத்தையே கைக்கொண்டு பாழாகி விடுகிறீர்கள். இன்று காலையில் நீங்கள் என் பெட்டியைத் திறந்ததை நானறிவேன். எதற்காகத் திறந்தீர்களோ என்று நினைத்து அவ்வமயம் பேசாதிருந்தேன். பிறகு நான் பெட்டியைத் திறக்கையில் அதில் வைத்திருந்த காசுமாலையைக் காணவில்லை. என் மனம் பெருங் குழப்பத்தை யடைந்துவிட்டது. என் ப்ராணகாந்தா! அந்த நகை நமது சொந்தமல்ல வென்பது நீங்கள் அறிந்த விஷயமே! என்னுடைய நகைகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக நான் உங்களுக்கே சமர்ப்பித்து விட்டேன். என்னுடைய சொந்த நகையாக விருப்பின் அதைப் பற்றி நான் உங்களைக் கேட்பதை தவறுதலாக நினைக்கலாம். இந்த நகை பிறர் வீட்டு நகை. கலியாணத்தின் நிமித்தம் இரவல் வாங்கி வந்தேன். அதைத் தாங்கள் எடுத்துவிட்டால் சொந்தக்காரர்களுக்கு என்ன

மறியல் செய்வதற்கு முன்பு அதன் விவரமே தெரியாமல் 'மறியல் என்றால் என்ன?' என்று மனத்தில் தோன்றுகின்றது. அந்த அருமையான தாய் நாட்டின் தொண்டு புரியச் சென்ற பிறகோ, அதன் சிறப்பு நன்கு விளங்குகின்றது. மறியல் செய்து மகிழும் மடந்தையரின் ஆர்வத்தைச் செய்தோர்தான் அறிவார்கள்.

பதில் கூறுவேன்? அவர்கள் நம்மிருவரையு மன்றோ சேர்த்துப் பிடித்துக்கொள்வார்கள். அது சாதாரண நகை யல்லவே, பெருந் தொகையை உள்ளதாயிற்றே! இப்பெருந் தொகை யுள்ள பொருளை நீங்கள் ஒன்றுக்குப் பாதியாக விற்று—அல்லது அடகு வைத்து—அதில் கிடைக்கும் பொருளை நீங்கள் இப்பாழும் கிண்டிப் பந்தயத் திலல்லவா தண்டத்திற்குக் கொட்டிவிட்டு வரப் போகிறீர்கள். எத்தனை பெயர்களுடைய கைப் பணத்தைப் பறித்து, மனத்தைத் துடிக்கச் செய்து, வயிறெரியச் செய்து அந்தப் பணத்தில் சிறு தொகையை அதிர்ஷ்டம் வந்தவனுக்குப் பரிசாகக் கோடுக்கிறார்கள். இதில் லாபமேனும் புண்ணியமேனும் உண்டா! ஒன்று மில்லையே! பாழும் கட்குடி, குதிரைப் பந்தயம், தாசி இம் மூன்று வகைகளில் அல்லவா நம் பாரத நாட்டின் மக்கள் தமது மெய் வருந்தப் பாடு பட்டு ஈட்டிய பொருளை கை நழுவ விட்டுக் கடன்காரராயும், நோயாளியாயும் பிரஷ்டர்களாயும் ஆகிக் கடைசியில் பெருத்த இன்னலுக்கு இலக்காகின்றார்கள். இந்த விஷயங்கள் எங்கும் கண் கூடாகக் கண்ட அனுபவமன்றோ! இதை நீங்கள் அறியமாட்டீர்களா! நமது அடுத்த வீட்டிலிருந்த அப்பாசாமியின் கதியை நினைத்துப் பார்க்கலாகாதா! அந்தப் பாவி ஆதியில் லக்ஷாதிபதியாக விருந்து இப்போது பிக்ஷாதிபதியாகி ஒரு கவளச் சோற்றிற்கு ஊரூராகத் திரிகின்றானே! குதிரைப் பந்தயமும், குடியு மல்லவா அவனை அடியோடு அழித்தன. அவனைக் கண்ணாரக் கண்ட தாங்களே இப் பாழும் குதிரைப் பந்தயத்திற்கு இவ்விதம் பிறர் பொருளை அபகரித்துக்கொண்டும் வாலாகுமா! என்ன கொடுமை! என்ன அனியாயம்! இப்போதும் பாதகமில்லை. இந்த நிமிடத்துடன் இவ்விடத் திலேயே அந்த அக்கிரமமான ஆசையை அடியோடு ஒழித்து விட்டு நீங்கள் வந்து விடுங்கள். அப்பணத்தை இங்கு அர்ப்பணம் செய்யாமல் கொண்டுவந்து நகையைத் திருப்பி மீட்டுக்கொண்டு செல்லலாம் வாருங்கள். நாதா! வேண்டாம்; காலை உதறிக்கொண்டு

சுதேசி என்றாலே சிலர் நடுங்கி விடுகின்றார்கள், அதன் அர்த்தமே இன்னதென்று அறியாது சிலர் வாளாவிருக்கிறார்கள். எல்லாம் அறிந்தும் சிலர் மௌனம் சாதிக்கின்றார்கள். அவர்களுக்கு இத்தேசம் யாருடையதோ! என்னவோ, என்ற சந்தேகமோ, என்னவோ தெரியவில்லை,

போகவேண்டாம்: நில்லுங்கள். நான் உங்களுடைய உயிரைக் காக்கக் கூடியவள். என் வார்த்தையில் நம்பிக்கை வைத்தால் வீண் போகமாட்டீர்கள். நாதா!'' என்று கெஞ்சிக் கேட்பதை எல்லாம் நாகசாமி சிறிதும் செவியில் வாங்காது முகத்தைச் சுளித்து வேறு மூலையைப் பார்த்து நின்று காலை உதறிக்கொண்டே "சே துஷ்டையே! கணவன் மீது இல்லாத அபாண்டத்தைக் கூறும் நீயா என் மனைவி! நீயா என் உயிரைக் காக்கக் கூடியவள். உன்னுடைய சாகஸ வார்த்தையில் மயங்கும் பேடி நானல்ல. நானா உன் பொருளை அபகரித்தேன். அடி சண்டாளி! வாய்க் கூசாமல் உன் பொருளை நான் களவாடினேன் என்று கூறும் நீயா உத்தமி; நான் உன் காசு மாலையின் முகத்திலேனும் விழித்திருப்பேனா! உன் பெட்டியை நான் எப்போதடி திறந்தேன்? நீ அன்னியர் வீட்டுப் பொருளை அற்பத்தனமாக வாங்கிக் கொண்டு வந்து எந்த விதத்திற்கு அதனை உபயோகித்துக் கொண்டாயோ அதைப்பற்றி நான் ஜவாப்தாரியல்ல. உத்தம பத்தினிக்கழகு தன் கணவன் மீது பழி சுமத்துவது தான் என்பதை நீ உலகத்திற்கே நன்றாக, நிதர்சனமாக எடுத்துக் காட்டி விட்டாய். உன்னுடைய யோக்யதையைக் கண்டு தான் நான் உன்னிடம் கற்றுக் கொள்ள வேண்டும் போல விருக்கிறது. சீச்சீ! நாயே! விலகிச் செல். உன் பொருளை நான் தீண்டுபவனே யல்லன். எனக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை. உன் சாகஸங்கள் என்னிடம் பலிக்காது. எனக்கு எந்த நேரத்திலும் கை கொடுத்துக் காக்கும் நண்பர்கள் இருக்கும் வரையில் குறைவே இல்லை. இந்த அபாண்டமான பழியைச் சுமத்துவதற்குத் தான் வெகு நல்லவள் போன்று நடித்து இங்கு தேடிக்கொண்டு வந்தாயோ! சீ; அப்புறம் செல்லு.'' என்று அவளை விலக்கிக் காலால் தள்ளிவிட்டு, "ஹா! அதோ மணியடித்து விட்டது.'' என்று கூறிக் கொண்டே ஒரே ஓட்டமாக ஓடிக் கும்பலில் மறைந்தான்.

சிலருக்கு எப்போது பார்த்தாலும் யாரையேனும் பற்றி குற்றலாகப் பேசிக் கொண்டிருப்பதே சுபாவமாக இருக்கிறது. அவர்களுடைய வார்த்தைக்கு எதிர்த்துப் பேசி விடினோ கோபம் உடனே வந்து விடுகிறது. அவ்வாறான கோபம் தம் வார்த்தையினால் அவர்களுக்கு வாராதா என்பதை அந்த மூடர்கள் அறிவதே இல்லை.

இவைகளைக் கேட்ட ஸாவித்ரியின் மனம் முன்னிலும் அதிகரித்த விசனத்தை யடைந்து வாடியது. "அண்ணா! நடந்தவற்றைக் கேட்டீர்களா! ஐயோ! இவை யாவும் நான் செய்த பாபமேயன்றி வேறில்லை. உலகத்தில் தம்பதிகள் இவ்விதந்தானா இருப்பார்கள். அன்பென்பது அணுவு மில்லையே! நானே அந்த நகையை ஏதோ செய்துவிட்ட மாதிரியாகக் கூறுகின்றாரே! நான் என்ன செய்வேன்? ஐயோ! அன்யோன்யமாயும் உயிரும் உடலுமாயும் இருந்த என் கண்மணி போன்ற அண்ணியைக் கடவுள் தன்னடியில் சேர்த்துக்கொண்டாரே! அவளைவிட்டு மகா பாபியாகிய என்னை ஏன் அவர் அபரிக்கலாகாது? ஐயோ; கடவுளே! இவ்விதம் தான் நீ திருவிளையாடல் செய்யவேண்டுமா! என்ன அனியாயம்! அன்புள்ள கணவனுக்கு அறிவிலா மனைவியும், அறிவில்லாக் கணவனுக்கு அன்புள்ள மனைவியும், இரண்டும் பொருந்தி இருப்போர்க்கு ஒருவரைப் பிரிந்து மற்றவர் துன்பப்படும்படியான துக்கமும் ஏன் நேரவேண்டும்? ஹா! நான் என் செய்வேன்?" என்று கலங்கினாள்.

இதைக் கேட்ட மதனகோபாலன் "அம்மா ஸாவித்திரி! நாம் செய்த பாபம் இத்தகையதாக விருக்கின்றது. இதற்கெல்லாம் கலங்கிப் பயனுண்டா! நான் பூர்வத்தில் எந்த தம்பதிகளைப் பிரித்து உயிர் அடிக்கச் செய்தேனோ! அந்த பலனை இப்போது அனுபவிக்கின்றேன். என் மனத் துயரத்தைக் கிளப்பிவிடின் நான் வீடு வந்து சேருவதே அரிது. வா; நாம் போகலாம் என்ன செய்வது? இக் காலக் கொடுமை எனக்கு மிகவும் பலமாக விருக்கிறது" என்று கூறிக்கொண்டே அவளுடன் தன் வீடு சென்றான். ஸாவித்ரிக்குத் தான் நகையை எந்த விதம் கொடுப்பதென்கிற விசனத்தில்

ஒரு விசேஷத்திற்கு அழைத்தால் சிலர் சகஜமாக வந்து செல்கிறார்கள். சிலர் 'அங்கு என்ன வம்பு விஷயம் கிடைக்கும்' என்று ஆராய்வதிலேயே நாட்டமாக உள்ளொன்றும் புறமொன்றுமாக வைத்துக் கொண்டுவந்து ஏதேனும் கிஷ்டூரம் பேசிவிட்டு வெற்றிலை பாக்கும் வாங்கிக் கொள்ளாது போகிறார்கள். பின்னும் சிலர், அன்றுதான் வேறு இதர காரியங்களை வைத்துக் கொண்டு அழைத்தவர்கள் வீட்டிற்குப் போகாது நின்றுவிடுகிறார்கள். அவரவர்களின் மனப்பான்மைபோல் நடக்கிறார்கள்.

மனம் குழம்பிவிட்டது. பெருத்த சோகத்தில் மூழ்கிவிட்டாள். மதனகோபாலன் தன்னறையில் ஓர் சாய்மான நாற்காலியில் படுத்துவிட்டான். அருகில் ஓராசனத்தில் லாவித்ரி அமர்ந்து "அண்ணு! எந்தவிதமாக நான் அந்த நகைக்குப் பதில் கூறுவேன்? எனக்கொன்றும் தோன்றவில்லையே! ஏற்கெனவே வாடி வதங்கிச் சோகமே உருக்கொண்டுள்ள உங்கள் மனத்திற்கு நான் ஒருத்தி ஓயாது பெரும் வருத்தத்தை யளித்து வாட்டுகிறேன். என்ன செய்வேன்?" என்று கண்ணீர் ததும்பக் கூறி வருந்தினள்.

இதுகேட்ட மதனகோபாலன் "அம்மா! லாவித்ரி! உன் வருத்தத்தைப் பற்றி நான் கவலைப் படுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன். அதற்கு ஏதோ ஓர் வழி செய்துவிட எனக்குத் தைரியம் உண்டு; எனினும் என் மனம் கவலைப்பட்டுத் தபிப்பதற்குக் காரணம் வேறுளது. உன் புருடன் இவ்விதமான துன்மார்க்கர்களோடு சகவாசம் செய்துகொண்டு காலத்தைப் பாழ்ப்படுத்தி விடின் உன் கதி யாதாவது. அவனுடைய செய்கை வர வர மிகவும் கேவலமாகிக்கொண்டே வருகிறதே. அவன் தினந்தோறும் குடிப்பதைப்பற்றி சிலர் என்னிடம் கூறக் கேட்டதை நான் நம்பவில்லை. என் கண்ணுல் அதையும் சில தினங்களாகக் காண்கிறேன். குடியின் பழக்கம் அதிகரித்து விட்டால் அது ஆளை அடியோடு கொண்டுபோய்விடுமே! குடியிலுள்ள கேட்டை விளக்கிய ஒரு பாடலை சுகந்தபுஷ்பம் என்கிற புத்தகத்தில் படித்தேன். அதில் உள்ள விஷயங்கள் ஒன்று கூடத் தப்பிதமே யில்லை; எத்தனை பெயர்களை நான் நேரில் அம்மாதிரி கண்டிருக்கிறேன் தெரியுமா! அதை நினைக்கவே பயமாக விருக்கிறது. எனது எஜமானராயும், குருவாயு முள்ள ராஜாராம் நாயுடுகாரு என்னை ஓர் சிறிய கேஸ் விஷயத்தில் அழைத்துச் சென்றார். அந்த கேஸின் சாரமாவது.—

"நமக்கு மிகவும் வேண்டியவர்கள்; தாய் போன்றவர்கள்: அவர்கள் வந்தால் தான் மனம் நிம்மதியடையும்." என்ற பெரும் அவாவினுல் நாம் அவர்களை அழைத்து எதிர்நோக்கி நிற்பது. அவர்கள் நாம் அழைத்ததையே மறந்தோ அன்றி வேறு எக்காரணத்தினுலோ ;வாராது இருந்து விடுகிருர்கள். எதிர் நோக்கிய மனது பெரும் வருத்தத்திற்குள்ளாகி விடுகின்றது.

ஒருவன் சாதாரணமாக கள்ளைக் குடிப்பது வழக்கமாம். அவன் தச்சு வேலை செய்யும் தொழிலுடையவனும். அவனுக்கு தொழில் செய்து கிடைக்கும் பொருள் தினந்தோறும் குடிப்பதற்கே போதாதாம். ஆகையினால் அந்த பணத்தை அப்படியே குடித்துவிட்டு அதுவும் போதாமல் மனைவியைப் பணங் கொடுக்கும்படியாக உபத்திரவம் செய்வானும். அவனுடைய மனைவி படிக்காத மூடமாயினும் பதி பக்தி நிறைந்தவளாம்; மகா உத்தமியாம். கணவன் மீது உயிரையே வைத்துள்ள பதிவிருதையாம். அவளுக்கு இரண்டு குழந்தைகள் உண்டாம். அந்த உத்தமி சில வீடுகளில் வேலை செய்வதும், வீட்டு வேலையைப் பார்த்துக்கொள்வதும் அதிலும் சிறிது பொழுதை மிச்சம் செய்துகொண்டு இடியாப்பம், தோசை, சுண்டல் முதலியன செய்து விற்று எல்லாவித வருமானத்தையும் கொண்டு வீட்டுக் குடிக்கூலி, சாப்பாடு, துணி, மணி முதலிய செலவுகளைப் பார்த்துக்கொள்வாளாம். கணவனை ஒரு பைசா கேட்கமாட்டாளாம். அவனை நோக்கி, "நாதா! நீங்கள் சம்பாதித்ததில் எனக்கு ஒரு காலணா கொடுக்கவேண்டாம். என் தேக சிரமத்தினால் நான் குடும்பத்தைப் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை அனாவசியமாகப் பாழும் குடியில் செலவிடாமல் சேர்த்து மிச்சம் செய்துகொள்ளுங்கள். அந்த அநியாயக் கள்ளின் குணம் இப்போது உங்களுக்கு விளங்காவிடினும் பின்னர் விளங்கும். மனிதருடைய அறிவையே அழித்துவிடும். ஆண்மையைப் போக்கும். உணர்வைக் கலக்கும். உள்ளத்தை வருத்தும். மனைவியை வெறுக்கும்படிச் செய்யும், மக்களை வருத்தும். அத்தகைய குடி கெடுக்கும் கள்ளை நீங்கள் குடிக்காதீர்கள். அடுத்த வீட்டு ஆறுமுகன் கள்ளினால் அடைந்த பலன்,—தன்னுயிரையைப் பறி கொடுத்தான். குடி வெறியில் நெருப்பு என்கிற உணர்வு கூட அழிந்து அதில் விழுந்து இறந்தான். ஆகையினால் அத்தகைய குடியை விட்டு விடுங்கள். கையிலுள்ள காசும் அற்று,

---

வேடிக்கையார்த்தமாயும், சந்தோஷ நிமித்தமாயும் ஒரு காரியம் — சங்கீதக் கச்சேரி...நடத்தி அதன்மூலம் பலரும் ஒன்றுகூடி மகிழ்ச்சியாக சில மணிநேரம் பொழுது கழிப்பது வெகு திருப்திகரமாயும் ஆனந்தகரமாயுமிருக்கிறது, இத்தகைய காரியத்தையும் வம்புபேசுகிறவர்கள் விட்டுக் கொடுப்பதில்லை.

தேகத்தின் ஆரோக்யத்தையும் குலைத்துக்கொண்டு பாழும் கள்ளைக் குடிப்பார்களா! அதை விட்டுவிடுங்கள், நீங்கள் ச்வஸ்தமாக வீட்டிலேயே உட்காருங்கள். நான் என் சரீரத்தைச் செருப்பா யுழைத்து உங்களைக் காப்பாற்றுகிறேன்.'' என்று பல தடவை களில் வெகு வணக்கமாகக் கூறுவாளாம்.

அதைக் கேட்ட அந்த மூர்க்கன் அவளைத் தாறுமாறுகத் திட்டியதோடு ளையப் புடைத்தும் செல்வானும். அவன் பணம் கேட்டபோது கொடுத்தால்தான் அவள் பிழைத்தாள். இல்லையேல் அவளைக் குத்துயிராகச் செய்து விடுவானும். அவ்விதமே ஓர் தினம் கட் குடிப்பதற்கு வெறிகொண்டான். கையில் காசில்லை. அன்று அவனுக்கு வேலையும் கிடைக்கவில்லை. ஆகையினுல் அந்த ஆவே சத்தில் வீட்டில் மனைவியிடம் வந்து பணங் கேட்டானும். அவள் வழக்கம் போல நீதிகளைப் பேசி, தன்னிடம் பணமில்லை என்று கூறி னுளாம். அவ்வாறு கூறியதால், குடிக்கவேண்டுமென்கிற பேரவா வின் மூர்க்கத்தில் தலை கால் தெரியாமல் அருகிலிருந்த உலக்கையை எடுத்து அவளை ஓங்கி யடித்து ''தடி முண்டை! எனக்குப் பணம் இல்லை என்ருசொன்னுய்!'' என்று கண்டவாறு திட்டிவிட்டு உலக்கையினுல்; அவளை தடார் புடார் என்று அடித்துவிட்டு அவன் கழுத்திலிருந்த மணியைக் கழற்றிக்கொண்டு ஓட்ட மெடுத்தானும். அந்த உலக்கை யடிக்கு அவள் உயிர் நின்றதா; சென்றதா! என்று கவனிக்க அவன் மதி செல்லவில்லை. அந்த உத்தமியின் மன வேதனை யொரு புற மிருக்க, உலக்கையின் அடி தலையில் பட்டதால் உடனே மண்டை கிழிந்து பிராணன் போய்விட்டது. அதையும் அப்பாவி கவனியாது பின்னும் அடித்திருக்கிருனும். அவன் எடுத்துச் சென்ற மணியை 8 அணுவுக்கு விற்று அதைக் கொண்டு குடித்துவிட்டு மெல்ல வீடு திரும்பினுனும்.

சங்கீதம் பாடுவதற்கு நன்ருகப் பழகியவர்கள், சிக்ஷையில் தேர்ந்தவர்கள் இவர்கள் பாடுவது சகஜம். சிக்ஷையே இன்றி தம் சொந்த மதியின் கூர்மை யினுல் சிலர் பாடுவது வெகு ஆச்சரியம். அவர்களின் சங்கீதத்தை, நன்ருகத் தெரிந்தவர்கள் விருத்தி செய்யவேண்டியது கடமை. அதை முன்னிட்டு சில ஸ்திரீகள் செய்து வரும் ஏற்பாடு மிகவும் போற்றத்தக்கது.

அவன் குழந்தைகள் சற்று புத்தியறிந்த 6-8-வயது நிரம்பி யவர்களாகையினால் இந்த விபரீதச் செய்கையைக் கண்டு கதறினர் களாம். தந்தையின் கையை மறிக்கச் சென்றால் அந்த உலக்கை அவர்கள்மீது விழுவது நிச்சயம். அதைத் தெரிந்து கொண்ட குழந் தைகள் பயந்து நடுங்கிப் பிரமை கொண்டு நின்று விட்டார்களாம். உலக்கையின் அடியினால் வீறிட்ட சத்தம் அண்டை அயல் முற்றும் கேட்டதாம். இந்தப் பாவி தினம் இவ்விதம்தான் அடித்துக் கொல் வதும், கூச்சல் கேட்பதும் சகஜமாகையினால் இதையும் வழக்கப்படி எண்ணி விட்டார்களாம். அந்தப் பாவி வெளியில் சென்ற பிறகு அந்தக் குழந்தைகள் அன்னை யருகில் சென்று "அம்மா! அம்மா!" என்று கத்த வாரம்பித்தன. தன்னருமைக் குழந்தைகளோடும் ஒரு வார்த்தை பேசாது அந்த உத்தமி இத் துஷ்டக் கணவனிடமிருந்து செலவு பெற்றுக் கொண்டு பரலோக யாத்திரை செய்வதற்குச் சென்று விட்டாள். தலையிலிருந்து வழிந்தோடும் இரத்த வெள் ளத்தைக் கண்ட குழந்தைகள் கோவெனக் கதறி யழுது, பயந்து கத்த வாரம்பித்தனவாம். உடனே அக்கம் பக்கம் கூட்டங் கூடி விட் டார்களாம். கள்ள மறியாத குழந்தைகள் இந்தக் கொலை நடந்த வர லாற்றை அப்படியே ஒளிக்காது கூறி விட்டனவாம். போலீஸார் வந்து விட்டார்கள். அச்சமயம் நாங்களும் சென்றோம். அவன் கள் குடித்துவிட்டுத் தன் நினைவு தனக்கில்லாது ஆடி விழுந்து கொண்டு அங்கு வந்தான்.

வீட்டில் கூட்டமும் கலபையுமாக விருப்பதைக் கண்ட அவ னுக்கு ஒன்றுமே விளங்க வில்லை. குடி மயக்கத்தில் ஒன்றுமே தோன்றாது தாறுமாறாகப் பிதற்றிக் கொண்டு விழுந்து விட்டான். அவனைப் போலீஸார் இழுத்துக் கொண்டு வந்து பிணத்தைக் காட்டி கேள்விகள் கேட்டார்கள். குடி மயக்கம் தெளியும் பரியந்தம் அவ னுக்கு ஒன்றுமே தெரியாது பிதற்றினான். மயக்கம் சற்றுத் தெளிந் ததும் உண்மையான தோற்றம் அவன் கண்களுக்குப் புலப் பட்

மரியாதையினால் பேசாமலிருந்த மனிதர்களிடத்திலும் சிலசமயம் பேசும் படி நெருக்கடியான சந்தர்ப்பம் நேர்ந்துவிடுகிறது, எந்தவிஷயத்திலும் எதிர் பாராத காரியங்களும், விஷயங்களும் தானே சகஜமாக உண்டாகி விடுகின்றன

டது. அவ்வளவு தான்; தன் மனைவியைத் தான் கொன்றதை கொடியிலறிந்து கொண்டான். அவனது சொந்த மூளை அப்பொழுதே உதயமாயிற்று. தன்னுடைய நிலைமையைத் தெரிந்து கொண்டான். ஹா! வென்று கீழே விழுந்து கதற வாரம்பித்தான். கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்து பலன் யாது? தன்னைக் கொலை பாதகனாகச் செய்தது அக் கொடிய கள்ளே என்பதை யறிந்து விழுந்து முட்டிக் கொண்டான்; கதறினான். தன் குற்றத்தைத் தானே ஒப்புக் கொண்டான். தன் மனைவியின் அருமையை எண்ணிக் கதறினான். பின்னர் எது செய்து என்ன பயன்? பாழுங் குடியின் காரணமாக ஒரு குடியே அழிந்து விட்டது. பிறகு அவனுக்குச் சிக்ஷையாகி விட்டது.

ஸாவித்ரீ! எனக்கு அந்த நினைவே அடிக்கடி தோன்றுகின்றது. குடிப்பவன் விருத்தி யடைவதுண்டா! குடியின் கேட்டைக் கூறினாலும் அதை செவியில் வாங்காது தன் போக்காகத் திரியும் உன் புருஷன் கதி என்ன வாகுமோ! உன் கதி என்ன வாகுமோ! இந்த கவலையே என்னை வாட்டி வருத்துகின்றது. குடி வெறியினால் நேரும் தீங்குகளை நான் அடிக்கடி பத்திரிகைகளிலும் நேரிலும் பார்த்திருக்கிறேன்; ஆகையினால் என் மனம் பதறுகின்றது. அதை யொழிப்பதற்கு என்ன வழி செய்யலாம் என்று யோசிக்கின்றேன். என்று நிரம்பவும் விசனத்துடன் கூறினான்.

அத்தருணம் ரங்கமணி தனது விசனமான முகத்திலும் சிறிது நகைப்பு உண்டாகி விட்ட தோற்றத்துடன் வந்து, "அண்ணா! நீங்கள் ஒரு விதமான கவலையில் போராடும் தறுவாயில் நானும் என் குறையை எடுத்துரைக்கவே வந்தேன். உங்கள் மனத்தின் நிலைமையே ஓர் மாபெரும் துக்க சாகரம். அதோடு நாங்களிருவரும் சேர்ந்து உங்களை பின்னும் பின்னும் வாட்டுகிறோம்" என்று கூறிக் கொண்டே நின்றாள்.

ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு அதை பதினாயிரமாகச் செய்யும் மனிதர்கள் எத்தனையோ பேர் உண்டு. பதினாயிரம் ரூபாயை வெகு சீக்கிரத்தில் கரைத்துவிட்டு சோற்றுக்குத் தாளம் போடும் சோணகிரிகளும் எத்தனையோர் பேர் உண்டு. அதிர்ஷ்டத்திற் கேற்ப அறிவு வளர்கின்றது.

R.V.Raman

மதன:—ரங்கமணி! வா; உட்காரு. கடவுள் ஒருவர் இருக்கிறாரே! அவர் சகலமான ப்ராணிகளையும், ஜீவ கோடிகளையும் சரியான வழியில் தான் கொண்டு திருப்புகிறார். ஒன்றின் பொருட்டாக மற்றொன்று. அதன் பொருட்டாக வேறொன்று. ஆகப் பலவிதம் செய்கிறார். எனக்கு அளப்பரிய சந்தோஷத்தையும், கண்மணி போன்ற காரிகையையும் அளித்தார். உடனே பிரித்தார். தீராத துயரத்தை என்னுயுள் முற்றும் அனுபவிக்கும்படியாகச் செய்தார். அவர் ஆக்ஞை இது. என் வினை இது. என் வருத்தத்தை நான் ஓயாது அனுபவித்தால் என்னுயிர் நீங்கி விடும். அதற்காகவே என் மனத்தில் உங்களிருவரின் மீதும் அளவற்ற பிரியத்தை உண்டாக்கி உங்கள் கர்ம பந்தத்தினால் ஏற்பட்ட கஷ்டங்களைக் கண்டு பகிர்ந்து கொள்ளும் படிக்கும் அதன் நிமித்தம் என்னுடைய சொந்த துயரத்தை உள்ளடக்கி வைத்திருக்கவும் செய்துள்ளார். என் வாழ்நாளில் இனி நான் இன்பம் என்பதைக் கண்டு களிப்பதென்று சொப்பனத்திலும் நினைக்க வேண்டாம். என்னுடைய சகலமான இன்பமும், போகமும், சந்தோஷமும், என்னருமை பானுமதியுடன் அனுப்பி விட்டேன். தற்போது உங்களிருவருடைய கஷ்டங்கள் இல்லாமலிருந்தால் அதையே நான் பெருத்த சுகமாக நினைப்பேன். என் மன வெறுப்பினால் இவ் வூரை விட்டு எங்கேனும் சென்று விடலாமா! மகாத்மா காந்தியின் தொண்டனாகப் போய் அவரடியில் விழுந்து விடலாமா?' என்று என் மனம் பறக்கின்றது. அதற்குத் துணிந்தும் விட்டேன். தேசசேவை செய்து நலம் பெறாத ஜன்மம் ஓர் ஜன்மமே ஆகாது என்பதே எனது நோக்கம். என் மன வருத்தம் இங்கிருப்பதால் அதிகரிக்கின்றதே யன்றி குறைவு படக் காணவில்லை. நான் தேசத் தொண்டனாகி பாரத மாதாவின் ஊழியத்தைச் செய்து கொண்டு மது விலக்கு, கதர் கட்டும்படியான ப்ரசாரம், முதலியனவற்றைச் செய்து கொண்டு என் காலத்தைச் சந்தோஷமாகக் கழிப்பேன். என்னாருயிர் பானுமதியை என் இதயக் கோயி

சிலருக்குத் திடீரென்று காரணமே இன்றி கோபம் சீறி வந்துவிடுகிறது. அதன் பயனாக எத்தனை பேருக்குத் திட்டோ, எத்தனை பேருக்குக் குட்டோ, எத்தனை பேருக்கு அடியோ சன்மானம் கிடைத்துவிடுகிறது. அந்தக் கோபம் பிறகு தானே சாந்தியாகிவிடுகின்றது.

நியூ இந்தியா

அஷியூரன்ஸ் கம்பெனி,

லிமிடெட், மதருஸ்.

தேவை.

கீழ்க் கண்ட ஜில்லாக்களின் எல்லா தாலுக்காக்களிலும், முக்கியமான நகரங்களிலும், நல்ல கமிஷனில் செல்வாக்கும், ஊக்கமும் மிகுந்த ஏஜெண்டுகள் தேவை:—

கோயம்பத்தூர்	வடாற்காடு
நீலகிரீஸ்	தஞ்சாவூர்

திருச்சி

இவ்வளவு வேலை செய்யமுடியும் என உத்தரவாதமிட்டு மேற்படி ஜில்லாக்களில் எவற்றிற்கேனும் ஸ்பெஷல் ஏஜென்ஸிகள் வேண்டுமென மனுச் செய்து கொள்ளுபவரின் மனுக்கள் ஆலோசிக்கப்படும்.

கீழ்க்கண்ட ஜில்லாக்களின் ஏஜென்ஸிகளுக்கு நேராகவோ அல்லது அவற்றிற் கெதிரே குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கோ மனுச் செய்து கொள்ளவும்:—

தென்னாற்காடு— மிஸ்டர் ஓ. என். முத்துசாமி ஐயர், நெ. 97, வடரத வீதி, சிதம்பரம்.
திருநெல்வேலி— ,, பி. பி. கே. பொன்னுசாமி நாடார், தென் ராஜதெரு. தூத்துக்குடி.
திருவாங்கூர் — ,, எஸ். சிவராம கிருஷ்ணய்யர், பட்டம் திருவனந்தபுரம்.
செங்கற்பட்டு — ,, கே. ரத்னம் முதலியார், திருப்போரூர், செங்கல்பட்டு.

ராமநாதபுரம் ஜில்லாவும், புதுக்கோட்டை சமஸ்தானம்—ஸ்ரீமான் D. V. அருணாசலம், (ஜெனரல் ஏஜண்ட்) ஜர்னலிஸ்டு: 'மாணிக்க விலாஸ்' தேவகோட்டை.

4/5, முதல் லைன் பீச்,
மதராஸ்.

கே. கே. ஸ்ரீனிவாஸன்,
பிராஞ்சு மானேஜர்.

நெருப்பு, கப்பல், மோட்டார் கார் இன்ஷியூரன்ஸ் ஏஜென்ஸிகளுக்குக்கூட செல்வாக்கு வாய்ந்த கனவான்களிடமிருந்து விண்ணப்பங்கள் தேவை.

கெட்டி சாயம்! உயர்ந்த உடை !! விலை நயம்!!;

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. செம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும், பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குவதே சரி.

அளவு 18 × 2¾ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-0-0 **2-வது ரகம்** ரூ. 4-0-0

பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-2.0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா : மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-0-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி : கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 × 2¾ விலை ரூ. 11-4-0
ரவிக்கை 1 முழம் 0-12.0

மேற்படி பிளேன், கோட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3.0.0 அதிகம்.

குறிப்பு....உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன்பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

வில் வைத்துப் பூஜை செய்வேன். அந்த என் இன்ப தேவதையின் தூய வரத்தின் மகிமையால் நான் தேசத்தின் தொண்டை ஆசையுடன் ஆற்றி, சுதேசித் துணியை அபிவிருத்தி செய்து நேசர்களை எல்லாம் கட்டும்படியாகத் தூண்டி ஓர் பாசத்தை அவர்களுக்கு ஊட்டி என்னால் கூடிய வரையில் செய்வதற்கு இன்றே முந்திச் செல்வேன். செல்வது என்னவோ கட்டாயந்தான். இதனால் நாம் மன நிம்மதியும், தேச பக்தியும் அடையலாம். தேச சேவை செய்யும் ஆர்வம் எனக்குள்ளதை வெளியிடத் திறமன்று உங்களிருவரின் கஷ்டத்தைக் கோரி நான் சற்று தியங்குகிறேன்; இல்லையேல் இன்றே காந்தியினருகில் செல்வேன். காந்தி மகாத்மாவின் மகிமையை நினைக்க தேகம் மயிர்க் கூச்செரிகின்றது. அந்த புண்ய மூர்த்தி ஓர் அவதார புருஷரே யன்றிச் சாமான்யமாக உண்டு உறங்கும் மனிதரில்லை என்பது உலகறிந்த விஷயம். அத்தகைய தெய்வத் தன்மை பொருந்திய உத்தம சீலரின் முகத்தில் விழித்தாலும் புண்ணியமுண்டு. செய்த;பாபம் விலகும். நான் யாவும் துறந்த சன்யாசியாகியும் என்னுடைய கர்மா என்னை இன்னும் விடவில்லை. உன் புருஷனோ வேசிக் கள்ளன்; இவள் புருஷனோ தாசி லோலன், குடியன் ஆக இரண்டு புகழும் படைத்தவன். இவை எல்லாம் போதாதென்று உங்கள் சிநேகிதை திலோத்தமா ஒருத்தி. அந்தப் பெண் படும் கஷ்டம் கூறத் திறமன்று. அவள் புருஷன் ஒரு தடிமுண்டையை வீட்டிலேயே கட்டியழுகிறான். நாராயணா! எனக்கு வந்து சேரும் கஷ்டமெல்லாம் இவ் விதமானதாகவா இருக்கவேண்டும்? என்ன அநியாய உலகம்! ரங்கமணி! உனக்குற்ற புதிய விஷயமென்ன?" என்று கேட்டான்.

ரங்கமணி:— அண்ணா! விஷயம் புதியதாக என்ன விருக்கிறது. எங்கள் எதிர் வீட்டுத் தாசிதான் என் குடித்தனத்திற்கு எமனாக வந்து சேர்ந்திருக்கிறாளே! அந்த முண்டை நாசமாய்ப் போக.

ஆவலுடன் ஒரு காரியத்தைச் செய்யப் புகின் அதை சிலர் வேண்டாமென்று தடுத்தும், அது விஷயத்தில் த்ருப்தி கொள்ளாது முகத்தைச் சுளித்தும் தம் வெறுப்பைக்காட்டி விடுகிறார்கள். இதனால் அக் காரியம் ஒழுங்குபட நடப்பதே இல்லை. அதை சிரமப்பட்டுப் பூர்த்தி செய்தாலும் அதற்கு மகிமை இருப்பதில்லை.

என் கணவன் எந்த ஊருக்குச் சர்க்யூட் சென்றாலும் அந்த தாசி தான் கூடக் கிளம்பிச் செல்கிறாள். இதை நான் எப்படியோ கவனித்து விட்டேன். இன்று என் கணவன் ஊருக்குச் செல்லப் போகிறார். அவருடன் நானும் வருவதாக இதுகாறும் தர்க்கம் செய்தேன். எத்தனையோ விதத்தால் எடுத்துக் கூறினேன். அவர் கேட்கவில்லை. அவருடைய மனத்தை நான் இனி திருப்புவது சாத்யமாகவே தோன்றவில்லை. அவர் ஒரே அடியாக அந்த தாசியின் சம்பந்தமே தனக்கில்லை என்று புளுகு சொல்கிறார். அவருடைய வார்த்தையை நான் நம்பாது பல விதத்திலும் முயற்சி செய்து அதைக் கண்டு பிடித்துவிட்டேன். அந்த வேசிக்குத் தான் என் கணவர் அடிமையாகிவிட்டார். வீட்டையும் கவனிப்பதில்லை. ஆபீஸ் வேலையையும் கவனிப்பதாகத் தெரியவில்லை. இன்று நான் எப்படியாவது அவருக்குத் தெரியாமல் அவருடன் பிரயாணம் செய்து இந்தத் திருட்டின் உண்மையைக் கவனிக்க வேண்டும். அதை உங்களிடம் கூறும் பொருட்டாகவே வந்தேன். உங்களுக்கு ஒழியுமா, அல்லது யாரையேனும் ஆளை அனுப்புகிறீர்களா! அதைத் தெரிவித்தால் அதன் படிக்கு நடக்கலாம்—என்றாள்.

இதைக்கேட்ட மதனகோபாலன், இதொரு துப்பு கண்டு பிடிக்கப் போகிறாயா; சரி; எது வேண்டுமாயினும் செய்யுங்கள். நான் வர வியலாது. நம்பிக்கையான ஆளை அனுப்புகிறேன். உனக்குத் தோன்றிய வழிகளில் எல்லாம் வேலை செய்து உன் கணவனை நல்வழிப் படுத்தினால் போதும். உங்கள் கவலைதான் என்னை சீர்குலைக்கின்றது. சரி, நான் சென்று ஒரு ஆளை தயார் செய்துகொண்டு வருகிறேன். இங்கேயே இரு.'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றான்.

* * * *

நாகசாமி மனைவியை உதைத்துத் தள்ளிவிட்டு ஓடி தன் சகபாடிகளிடம் சென்று தனக்கும், தன் மனைவிக்கும் நடந்த சகல

நாம் என்று ஒரு இடத்திற்குச் சென்று ஒருவரைச் சந்திக்க நினைத்து வருவதாகச் சொல்லியனுப்புகிறோமோ அன்றே நம் வீட்டிற்கு விருந்தினர்களும் மற்றுமுன்னோரும் வருகின்றார்கள். சொல்லிய விடத்தில் ஏமாற்றத்தை உண்டாக்கியதாகி விடுகிறது.

மான விஷயங்களையும் வெட்கமின்றி எடுத்துரைத்தான். அதற் குள் வண்டியும் வந்துவிட்டது. அவர்கள் வெகு குதூகலத்துடன் ரயிலில் ஏறினார்கள். வண்டியும் அடுத்த நிமிஷம் புறப்பட்டது. அந்நால்வருடைய களியாட்டத்திற்கும் குதூகலத்திற்கும் கேட்க வேண்டுமா! பணம் வந்துவிட்டதாகவே பாவித்துக்கொண்டு அதற் கேற்றவாறான சம்பாஷணைகளைத் தொடங்கிச் செய்துகொண்டு வெகு ஷோக்காகப் பொழுதை யோட்டிக் கிண்டி ஸ்டேஷனை யடைந்து வழக்கம்போல டிக்கட்டுப் பெற்றுக்கொண்டு சென்று உட்கார்ந்தார்கள். பந்தயமும் தொடங்கியது. குதிரைகள் பறக்கத் தொடங்கின. பிறகு போட்டி வலுத்தது. அவரவர்கள் பணங் கட்டியுள்ள நம்பர்க் குதிரையின் மேலேயே அவரவர்கள் மனமும் விழியும் பதிந்து கிடக்கின்றன. அவர்கள் மனத்தின் வேகமும் குதிரையின் வேகமும் போட்டி போடுகின்றது. "இந்தக் குதிரை தான் முன்னர் ஜெயிக்கும்; இந்தக் குதிரைதான் முதலில் ஜெயிக் கும்." என்று பேசிக்கொள்கிறார்கள். நாகஸாமி தான் கொண்டுபோயி ருந்த பணத்தைப் பூராவும் செலவிட்டுக் கட்டிவிட்டு அதே சிந்தனை யோடு எதிர்பார்த்திருந்தான். போட்டிகளும் நடந்தேறின. கடை சியில் நாகசாமியின் தள்ளலில் மண்ணை அள்ளிப் போட்டது போலவே வேறொரு குதிரை ஜெயித்துவிட்டது. அந்தக் குதிரை யின்மீது பணத்தைக் கட்டியவர்களில் ரிக்ஷா வண்டி இழுக்கும் ஏழைக் கூலி ஒருவன். அவன் தன் கைக் காசில் சேர்த்து வைத்திருந்த ரூபாயைக் கட்டினானும். அவனுக்கு ஜெயம் கிடைக் கும்படியாகக் கடவுள் செய்தார். இந்த விவரத்தைக் கேட்ட எல்லோரும் வியந்துவிட்டார்கள். நாகசாமியின் கையில் கொண்டு வந்திருந்த பணம் முற்றும் முதல் தடவையிலேயே அவன் போட்டு விட்டானாகையினால் கை வரண்டுவிட்டது. அத்தருணம் பணத்தை வாங்கிக் கொடுப்பதற்காகவே காத்துக்கொண்டிருக்கும் தாருக்

காதலனும் காதலியும் வெகு நாட்களாக ஒன்று கூடும் தருணத்தை எதிர் பார்த்திருந்து பிறகு அந்த நாள் சமீபித்து ஓரிடத்தில் சந்திக்கையில் அந்த விடம் ஒரு பெருங் காடோ, கருங்கடற்கரையோ; ஜனங்களற்ற வெட்ட வெளியோ! எந்த விடமாக விருப்பினும் அவ்விடமே தேவலோகமாகத் தோன்றுகின்றதாம். இது ஒரு அனுபவியின் வாசகு.

210031

காரர்களின் உதவியால் நாகசாமியின் நண்பர்கள் பின்னும் சில நூறு ரூபாய்கள் வாங்கிக் கொடுத்தார்கள்.

அன்று பூராவும் நடந்த ரேஸில் கடன் வாங்கிக் கட்டிய தொகையும் கையிலிருந்து செலவழிந்த தொகையும் சுமார் ஒரு பிள்ளையாருக்கு வந்துவிட்டது. 500 ரூபாயைக் கையில் வாங்கிக்கொண்டு 1000 ரூபாயிக்கு நோட் எழுதிக்கொடுத்துவிட்டுக் கடன் பெற்றுக் கட்டியும் கடைசியில் தலைமீது கையை வைத்துக் கொள்ளும்படியாகி விட்டது. கடன்பட்டுக் கட்டிய உணர்ச்சி யற்று விடினும், தான் கட்டிய குதிரை ஒன்றும் ஜெயிக்கவில்லையே என்கிற ஏக்கம் உண்டாகிவிட்டது. கையில் எஞ்சி நின்றது 10 ரூபாய் தான். "மறுநாளைய ரேஸுக்கு எவ்வாறு பணத்தைச் சேகரிப்பது, எந்தக் குதிரையின்மீது போடுவது?" என்பதான பெரும் யோசனையில் குழம்பியவாறு அவன் அவ்விடத்தை விட்டுக் கிளம்பினான். கூடவிருக்கும் பிரதர்கள் அவன் கையில் 10 ரூபாய் இருப்பதைத் தெரிந்துள்ளவர்களாகையினால் "நாகசாமி! இன்று நீ மிகவும் களைத்திருக்கிறாய். இந்த ஓட்டலுக்குச் சென்று இரண்டு பாட்டலைத் தட்டிவிட்டாயானால் இந்த களைப்பு நீங்கிவிடும். மறுதினம் பந்தயத்திற்கு தற்கு சுருசுருப்பும் ஊக்கமும் உண்டாகும். இதோ! இந்த லிஸ்டைப் பாரு. இந்த குதிரை கட்டாயமாக ஜெயிக்கும். இதன் பேரில் கட்டிய யாரும் தோல்வி யடையவில்லை. அடுத்த தினம் நீ இந்தக் குதிரையின் மீது கட்டு, அது ஜெயிக்காவிடில் என்னைக் கேள். ஏன் ஒருவாறாக இருக்கிறாய்? உனக்கென்ன இது ஒரு வரவா, செலவா! இதைப் போன்று நீ எத்தனை தரம் கட்டவில்லை. அப்போதெல்லாம் நீ இந்த மாதிரியாகவா சோர்ந்து விழுந்தாய்! இல்லையே! இந்த தரம் ஏன் இவ்விதம் வருத்தமுற்று வாடுகிறாய்? இன்று பணங் கொடுத்த மார்வாடியை நான் கேட்டேன். அவனே இன்னும் ஆயிரம் ரூபாய் வேண்டுமாயினும் கொடுப்பதாகக் கூறினான். அவனிடமே நாம் வாங்கிக்கொள்ளலாம். இதில் உனக்கு

பேசும்போது இன்பமும் துன்பமும் கலந்திருப்பினும் அதை நேரில் அனுபவிக்கும் மனிதர்கள் வாயிலாகவே கேட்பது ஓர் தனி ருசி. அதைப் பிறர் வாயிலாகக் கேட்பது அவ்வளவு ருசிப்பதில்லை.

சிரமமே இல்லை. மறுநாளைக்கு இந்த நம்பருள்ள குதிரையின்மீது கட்டினால் இதுபரியந்தம் உன் கைவிட்டுச் சென்று போன பொருளை நீ ஒரு நொடியில் எடுத்துவிடலாம். இது உனக்கு ஓர் கஷ்டமே இல்லை. சொந்த வீடு படைத்துள்ள உனக்கென்ன குறைவு? வா; ஒரு பாட்டிலைத் தள்ளு" என்று அவனுக்கு மிகுந்த தேறுதலைக் கூறி அவனை ஒரு ஓட்டலுக்குள் இழுத்துச் சென்று உட்காரவைத்தார்கள்.

நாகசாமிக்கு இம்மொழிகள் மிக்க ஆறுதலையே அளித்தன. அவன் பிறகு சிறிது உற்சாகமடைந்து அவர்களுடன் நன்றாக சிற்றுண்டியும் மதுபானமும் அருந்திவிட்டுப் பிறகு அவ்விடத்திலும் 15 ரூபாய் கடன் வைத்துக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு நேரே வீட்டிற்கு வந்தான். மற்றப் பணம் பிடிங்கிகளும் இவனை விட்டகன்றனர். அன்று அவன் வீட்டிற்கு வரும்போதே சரியான நினைவு இல்லை. சீமைச் சாராயத்தின் போதைத் தலைக் கேறி விட்டது. தாறுமாறாக நடந்துதான் வீடு திரும்பினான். அவன் வீட்டிற்கு வரும் நேரத்தில் ஸாவித்திரி வீட்டிலில்லை. அவள் மதனகோபாலன் வீட்டிற்குச் சென்றிருந்தாளாகையினால் வீடு பூட்டப் பட்டிருந்தது. அப்போது மாலை 7 இருக்கலாம். நாகசாமி வீடு பூட்டப் பட்டிருப்பதைக் கண்டான். அவனுடைய நிலைமை தடுமாற்றமாக விருந்ததால் வீதித் திண்ணையில் படுத்து விட்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஸாவித்ரி வந்தாள். வீதித் திண்ணையில் யாரோ படுத்திருப்பதை மட்டும் கண்டாளே யன்றி, படுத்திருப்பது யார் என்று அவள் கவனிக்கவில்லை. சாதாரணமாக இளைப்பாறும் பொருட்டு யாரேனும் படுக்கும் வழக்கம் உண்டு. அவ்விதம் யாரோ படுத்திருப்பதாக எண்ணி நேரே சென்று உட்புறம் கதவைத் தாளிட்டுக் கொண்டு தனது சமையல் வேலையைத் தொடங்கினாள்.

தேசீய விஷயமாக சில விஷயங்களை எடுத்துக் கூறினால் சில பெரிய மனிதர்கள், "ஆம்" என்று தலையாட்டுகிறார்கள். அவர்கள் அப்போது காட்டும் உணர்ச்சியில் கதர் உடனே கட்டுகிறவர்கள் போலக் காணப்படுகிறார்கள். பிறகு அவர்களைச் சந்திக்க நேருமிடம் பெரிய சில்கு ஷாப்பில் தான்.

சமயல் செய்து கொண்டிருக்கையில் பால்காரன் வந்து கதவை இடித்தான். உடனே வந்து திறந்தாள். அப்போது பால்காரன், "அம்மா! எஜமான் ஏன் வீதித் திண்ணையில் படுத்திருக்கிறாரே! உடம்புக்கு என்ன?" என்று கேட்டான். இந்த வார்த்தையைக் கேட்டு வியப்பும் திகைப்பும் கொண்ட ஸாவித்ரி "என்ன எஜமானு வீதியில் படுத்திருக்கிறார்?" என்று கூறிக் கொண்டே பால் சொம்பை போட்டு விட்டு ஓடோடியும் வீதிக்கு வந்து பார்த்தாள். தன் கணவன் ஸ்மரணையற்று தாறுமாறாக விழுந்து கிடப்பதை நோக்கி "ஐயோ! இதென்ன பரிபவம்! ஏன் இப்படிக் கிடக்கிறார்?" என்று நடு நடுங்கிப்போய் விவரம் தெரியாது நின்று "நாதா! நாதா!" என்று அழைத்தாள். பதிலே இல்லை. ஸாவித்ரிக்கு முன்னிலும் அதிகரித்த திகிலும் பயமும் தோன்றி விட்டதால் வீதி என்பதையும் மறந்து "ஹா! கடவுளே!" என்று அலறியவாறு நின்று விட்டாள்.

5—வது அதிகாரம்

உத்தமப் பாவையின் சித்தத்தின் தீரம்

முன்னதிகாரத்தில் தெரிவித்தபடி மதனகோபாலன் ஒரு நம்பிக்கையான ஆளைப் பார்த்துக் கொடுத்ததும், அவனை அழைத்துக் கொண்டு ரங்கமணி தன் வீட்டிற்குச் சென்றாள். அவனை வீதியிலே உலாவும்படியாகக் கூறி விட்டுத் தான் வீட்டினுள்ளிருந்த வேலைகளை முடித்துக் கொண்டு அந்த ஆளின் துணையோடு தன் கணவனுக்குத் தெரியாமல் ரயிலடிக்குச் சென்று டிக்கட்டு பெற்றுக் கொண்டு ஒரு வண்டியில் ஏறி விட்டாள். வேறு ஸ்டேஷனில் தன் கணவன் இறங்கி வந்

"கணவனின் அறிவிலித் தன்மையை வெளியிடுவதற்கு மனங் கூசுகிறது. அதை வெளியிட்டாலோ பொல்லாத பட்டம் உடனே கிடைத்துவிடுகிறது. அதை உள்ளடக்கியே இருப்பதால் உள்ளம் கொதிக்கின்றது. இதற்கு என்ன செய்வேன்?" என்கிறாள் ஓர் இள நங்கை.

தனை அவள் கவனித்துக் கொண்டே இருந்தாளாகையினால் அவள் ஏதும் வாய் திறந்து பேசாது உட்கார்ந்திருந்தாள். கிருஷ்ணசாமி இறங்கி வந்தவுடன் ரங்கமணியைப் பார்த்து ஸ்தம்பித்து நின்று விட்டான். அதே சமயத்தில் அம்ருதபாஷிணியும் இறங்கி வந்தாள் என்பதை நாம் முன்னரே தெரிவித்தோம். கிருஷ்ணசாமிக்கு அவ் விருவரையும் அங்கு கண்டதினால் மன அதிர்ச்சி உண்டாகிவிட்டது. அவன் ரயிலடியின் சமீபத்தில் வந்து ரங்கமணியை நோக்கி "நீ எதற்கு இங்கு வந்தாய்? எவ்விதம் வந்தாய்? ஏதேது! நீ மிகவும் மித மிஞ்சி விட்டாயே! உன் மனத்தில் நீ என்ன நினைத்துக் கொண் டிருக்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டே கையினால் அம்ருத பாஷிணியை "அப்படியே இரு; அப்படியே இரு." என்று சமிக்ஞை செய்கிறான். அவளுடைய வருகை ரங்கமணிக்கு எங்கே தெரிந்து விடப்போகிறதோ என்கிற பெரும் பயம் மனத்தில் உதறுகின்றது. இவள் தன்னைத் துப்பறியும் பொருட்டாகவே வந்திருக்கிறாள் என் பதை நன்கு தெரிந்து கொண்டு விட்டானாகையால் இவளுக்குத் தெரியாமல் அவளை எவ்விதமேனும் மறைத்து விட வேண்டும், என்று மனத்தில் எண்ணியவாறு ரங்கமணியை நோக்கி "அடீ பயித்தியக்காரி! நீ கட்டாயமாக வரவேண்டுமென்று பிடிவாதமாகச் சொல்லி;இருந்தால் நான் உன்னை இரண்டாவது வகுப்பில் அழைத் துக் கொண்டு வந்திருப்பேனே! இவ்விதம் துணிபுடன் எனக்குத் தெரியாமல் நீ புறப்பட்டு வர வேண்டுமா!" என்று கண் துடைக் கும் வார்த்தையைக் கூறி அவளை இறக்கித் தான் அமர்ந்த இரண் டாவது வகுப்பு வண்டியில் ஏற்றிக் கொண்டான். உடனே ஏதோ நினைத்தவன் போல அபிநயித்து "இதோ கார்டினிடம் சென்று முக் கிய விஷயம் ஒன்று தெரிவித்து விட்டு வருகிறேன்." என்று கூறி இறங்கினான். குருசாமியும், பாஷிணியும் கூடவிருக்கும் வண்டியரு கில் சென்று குருசாமியை நோக்கி, "குருசாமி! இவளை இறக்கி அடுத்த ரயிலில் ஊருக்குத் திரும்ப அழைத்துக் கொண்டு சென்று

விவாக காலத்தில் பெற்றோர்கள் தம் மகளின் சொற்படி நடக்காது அப் பெண்ணை மனவிரோதமான ஓரிடத்தில் தள்ளிவிட்ட பிறகு பெண்ணின் துயரத்தையும் அதன் இம்சையையும் அந்தப் பெற்றோர்களே ஒரு காலத்தில் கண்டு மனம் வருந்த நேராமல் போவதில்லை.

விடு, என் வீட்டுக்காரி ரோக்து பார்க்க வந்திருக்கிறாள். நான் அவளுக்குச் சரியானபடி காரணம் கூறி இருக்கிறேன்; ஜாக்ரதை'' என்று கூறிவிட்டு வெகு விரைவில் வண்டியில் வந்து ஏறிக் கொண்டான்.

ரங்கமணிக்கு மிக்க வியப்பு உண்டாகி விட்டது. அந்த தடிச்சி இன்று ஊருக்குச் செல்வதற்கு ஆயத்தமாயிருந்தாளே! அவள் இந்த வண்டியில் காணவில்லையே! இதென்ன வேடிக்கை!'' என்று தனக்குள் பலமாக யோசிக்கின்றாள். ஒன்றுமே புலப்படவில்லை. தன் கணவன் பொய்யுரைப்பதில் அஞ்சாத தீரனாயினும், இருவரும் ஒன்றாக வன்றோ செல்வார்கள். அங்ஙனமிருக்க இவரை மட்டும் இங்கு கண்டோம். அந்தத் தேவடியாள் எங்கே சென்றிருப்பாள். என் கண்ணில் மண்ணைத் தூவி விட்டாரோ! அன்றி அவளை இம்முறை உண்மையிலேயே அழைத்து வரவில்லையோ! ஒன்றும் விளங்கவில்லை. இதில் என்ன சூது நடந்திருக்கும்?'' என்று பலவிதமாக யோசித்துக் கொண்டிருக்கையில் கிருஷ்ணசாமி மீண்டும் வந்து வண்டியில் அமர்ந்தான். அவனிடம் ரங்கமணி ஏதுமே பேசவில்லை. மவுனமாகவே உட்கார்ந்திருந்தாள்.

கிருஷ்ண:— என்ன ரங்கமணீ யோசனை செய்கிறாய்! என் வார்த்தையில் நம்பிக்கை கொள்ளாது நீ என்னைப் பின்தொடர்ந்து வந்தாயே! இங்கு நீ என்ன கண்டுபிடித்தாய்? நான் அந்த வேசியைக் கூட அழைத்து வந்துவிட்டேனென்று நீ ஏன் குருட்டு யோசனை செய்யவேண்டும். அவளுடன் எனக்குப் பழக்கமே கிடையாது. அவளை நான் எதற்காக அழைத்து வரவேண்டும்?

ரங்க:— எல்லாம் எனக்கும் தெரியும். உங்கள் வார்த்தையில் நம்பிக்கை கொள்ளாமல் கூட இருப்பார்களா! நீங்கள்தான் சத்ய அரிச்சந்திரனாயிற்றே? என் தலைவிதிப்படி நான் இருக்கிறேன். நீங்கள் அந்த தாசியுடன் சம்பந்தப் படவில்லை என்று ப்ரமாணம்

சில ருத்திராக்ஷப் பூனைகள் உளவை அறிந்து பெட்டியிலுள்ள பணத்தைக் களவாடிக்கொண்டு இருந்த விடம் தெரியாது வெளியூருக்கு அன்றே ஓடிவிடுகின்றன. உண்மையான ஜோஸியம் இதைக் காட்டிவிடுகின்றது.

செய்வீர்களா? அவளுடன் நீங்கள் சம்பந்தப் பட்டிருக்கிறீர்கள் என்பதை நான் மனந்துணிந்து கடவுள்மீது ஆணையிட்டுச் சத்தியம் செய்வேன். நான் ஒன்றும் அறியாத மூடம் என்று நினைக்கவேண்டாம். உங்களுடைய வெளி படாடோபத்தைக் கண்டு ஊரார் மிரளுவதுபோல நானும் மிரளுவேன் என்று எண்ண வேண்டாம். என்னுடைய மனச்சாக்ஷியும் உங்களுடைய மனச்சாக்ஷியும் உங்கள் மோசத்தையறியுமே யன்றிப் பிறர் அறிய மாட்டார்கள். பிரதி இரவிலும் நீங்கள் செல்வதையும், திரும்புவதையும் நான் கவனியாது மூதேவியாகி உறங்க வில்லை. எல்லாவற்றையும் அறிந்து தானிருக்கிறேன். உங்களுடைய போதாக்காலக் கொடுமையே இவ்வித துர்ப்புத்தியையளித்து விட்டது. வேசிவாய்ப் பட்டு மீண்டவர்கள் எவரேனும் உண்டா! வேசி யிடத்திற்கு வெகு ஆசையுடன் சென்று காசைப் பறிகொடுத்து விட்டுத் திரும்புவது இப்போது வெகு சந்தோஷமாகத் தானிருக்கும். பிறகு நீங்கள் அடையப் போகும் பலன் யாது தெரியுமா! அதனை நான் இது பரியந்தம் பதினாயிரம் தரம் எடுத்துரைத்திருக்கின்றேன். அதையே மீண்டும் கூறுகின்றேன் கேளுங்கள்.

மோகத் திமிர்கொண்டு முலைமடவார் மெய்யின்பப்
போகத்தை நீர் விரும்பிப் பொற்குவியல் கையேந்தி
வேகத்தோடு சென்று வேசி வீட்டிற் புகுந்து
மேகத்தோடு ரோகம் விலைகொண்டு மீள்வீரே!

இந்த கதிதான் ஆகும். தற்போது நாம் பிரத்யக்ஷமாக அத்தகையோர் எத்தனை பெயர்களைப் பார்க்கவில்லை. உங்களுடன் ஆபீஸில் வேலை பார்த்து வந்த முத்துசாமியை இந்த ரோகத்தின் காரணமாக வேலையை விட்டு நீக்கிவிடவில்லையா! அதை நீங்கள் கண்டறிந்த பிறகும் இத்தகைய ஈனத்தொழிலை மேற்கொள்வீரோ! அதைக் குறித்து நான் பலதரம் எடுத்தோதுவது முற்றும் விழலுக்கிறைத்த நீராகவா ஆகவேண்டும். தங்க

ஜாக்ரதை என்பது மனிதர்களின் முயற்சியில் மட்டு மில்லை. ஜெயம் உள்ளவரையில் எல்லாம் ஜாக்ரதைதான். ஜெயம் தவறுகிற காலத்தில் எத்தனையோ ஜாக்ரதையாக வைத்திருக்கும் பொருளும் கள்ளர் வசமாகிவிடுகின்றது.

ளுடைய இப்போதைய நிலைமையில் நான் சத்துருவாகக் கண்ணிற்குப் படுகிறேன்; எனினும் உங்களுடைய பக்கலில் கூசாமல் நின்று "என் கணவன் இவர்தான்" என்று தாராளமாகக் கூறுவதற்கு யோக்யதையும், உரிமையும் பெற்றவள் நானேயன்றி அந்தக் கழுதை முண்டைக்குச் சிறிதும் யோக்கியதை இல்லை என்பதை சற்றும் மறக்கவேண்டாம்.

கிருஷ்ண:—என்ன ரங்கமணீ! உன் மனம் போனவாறெல்லாம் பேசுகின்றாயே! என்மீது நீ கொண்டுள்ள சந்தேகத்தை உண்மை என்று ஸ்தாபித்து ஸர்ஜிதப்படுத்தி விடுவாய் போலவிருக்கிறதே! நான் அவள் வீட்டிற்குக் குழந்தையைத் தேடிக்கொண்டும், அவளுடைய ஆடல் பாடல்களைப் பார்ப்பதற்கும் செல்கிறேனேயன்றி வேறு விஷயமாக நான் செல்வதே இல்லை. இதை ஏன் நீ நம்ப மாட்டேனென்கிறாய்! உன்னுடைய பிடிவாதத்தை விடு. இப்போது அகஸ்மாத்தாகத் தானே தேடிக்கொண்டு என்னைச் சோதிக்க வந்தாய். இங்கு அவளிருக்கிறாளா! நான் சொன்னதை நம்பாது வீணாக ஏன் ஓடி வந்தாய்? உனக்குள்ள அக்கரை எனக்கில்லையா! தடபுடலாகப் பேசுகிறாயே! இனி அவ்வார்த்தையை விடு." என்று மிகவும் சாதுவைப் போன்று பேசி, தன்னுடைய திருட்டை மறைக்க முயன்றான்.

பலவிதத்திலும் நன்கு கண்டறிந்த ரங்கமணி அவ்வளவுடன் விடாது ஏதேதோ பேசிச் சண்டை செய்துப் பின் ஓய்ந்தாள். ரயில் பிரயாணமும் முடிந்தது. அவர்கள் இறங்கவேண்டிய இடத்தில் இறங்கினார்கள். அவர்களுக்கென நியமிக்கப்பட்ட விடத்திற்குச் சென்று, அன்று அங்குள்ள வேலையை முடித்துக்கொண்டு அவ்வூரிலுள்ள தேவாலயத்திற்குச் சென்றார்கள். அன்று பெரிய உற்சவமாகையினால் அங்கு கூட்டம் மிகுந்திருந்தது. அந்த

ஒருவர் தமது சிறு பிராயத்தில் செய்துவிட்ட பல தீத்தொழில்களையறிந்துகொண்ட மற்றொருவர், 'ஐயா! நீங்கள் இவ்வித அக்கிரமமான காரியங்களைச் செய்யலாமா?" என்று கேட்டதற்கு "ஸ்ரீராமபிரானிடத்தில் சரணகதியடைந்த விபீஷணனை அவர் காத்தது கடமைபோல, "எம்மை நீங்கள் அங்கீகரித்தால்தான் எமது உயிர் தரிக்குமென்று அப்பெண்கள் கேட்டுக்

கும்பலின் மத்தியில் ஓர் தம்பதிகள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களின் ஜோடி விச்சோடியாக விருந்தது. அந்தப் பெண் சுமாரான அழகுடையவள்.. அவள் நமது கிருஷ்ணசாமியை இமை கொட்டாது பார்த்துக்கொண்டும், கண்ணடித்துக் கொண்டும் நின்றாள். அந்தக் கூட்டத்தின் கலபையில் அதைக் கவனியாது ரங்கமணி சுவாமியையே சேவித்துக்கொண்டு நின்றாள். கிருஷ்ண சாமியைப் பற்றி நாம் கூறவேண்டியது அனுவசியம். அவனு டைய விழிகளிரண்டும் அந்தப் பெண் பேயை விட்டுப் பெயர வில்லை. கும்பலில் தள்ளிக்கொண்டே இருவரும் கொஞ்சங் கொஞ்ச மாக நெருங்கிக் கடைசியில் ஒன்று சேர்ந்தார்கள். அவர்களுக்குள் கள்ள சங்கேதங்கள் பலமாக நடந்துவிட்டன. அவள் தன்னுடைய புருஷனையும் வலிய சிநேகம் செய்து வைத்தாள். பகிரங்கமாகவே "எந்த ஊர்? எப்போது வந்தீர்கள்! நீங்கள் எங்கு இறங்கி இருக் கின்றீர்கள்?" என்றது போன்ற உலக விஷயமாகப் பேச வாரம்பித் தார்கள். அந்த விதமே சம்பாஷணை வலுத்துவிட்டது.

[இத்தகைய ஆபாசமான விஷயங்களை எடுத்து விவரிப்ப தற்குக் கையும் மனமும் வெறுக்கின்றன; எனினும் இந்த ஸாரமதியில் வந்துள்ள ஒவ்வொரு விஷயமும், ஒவ்வொரு அத்தியாயமும் நேரில், உண்மையில், நடந்தவைகளாகை யினால், உண்மையில் நடந்த ஆபாசமானவற்றில் சில விஷ யங்களை மட்டுமேனும் விவரிக்கவேண்டி யிருக்கின்றது. இவ் விதமும் நடக்குமா என்று சாதாரணமாக ஜனங்கள் கூறலாம். நேரில் அனுபவத்தில் நடக்காத விஷயம் எதுவுமே கிடை யாது என்பதே என்னுடைய தீர்மானம். அவரவர்களின் ஜீவிய சரிதையைத் தாமே பிறகு உணர்ந்து, பட்டுத் தேறி, மனம் வெறுத்தோ அன்றி இவ்விதம் செய்துவிட்டோமே என்று விசனித்தோ கூறுவதைக் கேட்டபிறகு எம் போன்ற எழுதும்

கொண்டபடி அவர்களின் இஷ்டத்தை நான் பூர்த்தி செய்தது பெரும் புண்ணியமேயன்றி பாவமேயல்ல" என்று அப்பெரியவர் மனத்துணிபுடன் தெரிவித்தார், இந்த தர்ம நியாய சாஸ்திர ஆராச்சியை எந்த ஏட்டில் படித்துப் பிடித்தாரோ தெரியவில்லை.

பழக்கமுள்ளவர்கள் அதை வெறுமனே கேட்டு விட்டு விட மாட்டார்கள். நடந்த விஷயங்களுடன் கற்பனாலங்காரத்தையும் கூட்டி ஓர் கதை ரூபமாக வரைந்து இவ்விதமான விஷயங்கள் யாவும் நேருக்கு நேராக நடந்த விஷயங்கள் என்பதை உலக ஜனங்களுக்கு எடுத்துக் காட்டவேண்டுமென்கிற எண்ணமும், ஆவலும் எனக்கு மிகுந்துள்ளபடியால் இவைகளை எழுதுகிறேன். ஓர் நன்மையின் பெருமையை விளக்கிக் காட்டுவதற்கு அதற்கு நேர் மாறான தீமையை முதலில் காட்டினால் தான் நன்மையின் உயர்வும், தீமையின் முடிவும் நன்கு தெரியும். வெயிலில் நிற்காமலேயே நிழலில் இருப்பவருக்கு நிழலின் அருமையும், வெயிலின் வெப்பமும் சிறிதும் தெரிய வராதல்லவா! அது போன்று ஒன்றைக் காட்டுவதற்கு மற்றொன்றை அவசியம் விளக்க வேண்டியதாக விருக்கிறது. ஆகையினால் நான் அறிந்துள்ளவரையில் ஜீவிய சரிதையில் உள்ள ஆபாசங்களை விலக்கிவிட்டு மற்ற விஷயங்களைச் சற்றும் விடாது வரைகின்றேன்.]

பிறகு அவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி கிருஷ்ணஸ்வாமி தங்கி இருந்த விடுதிக்கே வந்து தங்கினார்கள். இரண்டு நாட்கள் வரையில் எல்லோரும் ஒன்றாக விருந்தார்கள். பிறகு அவர்கள் தம் தம் ஊருக்குத் திரும்பினார்கள். ஏற்கெனவே கிருஷ்ணசாமி தன் மனைவியை விலக்கி விட்டு வேசி நட்பு கொண்டலைந்தான். அதுவும் போதாக் குறைக்கு இந்தப் புதிய ஸ்நேகம் உண்டாகியது. அந்த புதிய சிநேகிதர் இருக்கும் ஊர் சமீபத்திலேயே இருப்பதால் அடிக்கடி அங்குச் செல்ல வாரம்பித்தான். இதை யறிந்த தாசி அம்ருதபாஷிணிக்குக் கோபம் வந்து விட்டது. அதன் மூலம் சண்டை யிட்டுக் கொண்டு கிருஷ்ணசாமியுடன் பேசாமல், அவனை வீட்டு வழியே சேர்க்காமல் தள்ளி விட்டாள். இதை யறிந்த கிருஷ்ணசாமி

ஆதியில் தான் செய்துவிட்ட லீலைகளையெல்லாம் அறிந்த பிறர் அவற்றை எடுத்துக் கூறினால் ஒரு சமயம் ஆனந்தமாய்க் கேட்கிறார். ஒருசமயம் வெறுப்புற்றவர்போல நடித்துப் பேசுகிறார். வயது எண்பதாயினும் அந்த லீலைகளின் ருசியை மறப்பதாகக் காணவில்லை, இது என்ன கலியின் கூத்தோ?

அவளிடம் சென்று கெஞ்சிக் கூத்தாடிப் பேசிப் பல்லிளித்தான். ஏதேதோ சமாதானங்களைக் கூறினான். மீண்டும் சிநேகம் செய்து கொள்வதற்கான முயற்சிகளைச் செய்தான்.

ஏற்கெனவே சந்தேகங் கொண்டுள்ள ரங்கமணிக்கு கிருஷ்ணனுடைய செய்கை மன வெறுப்பும், அதிருப்தியுமளித்து விட்டது. அவனுடன் பேசுவதையே குறைத்துக் கொண்டாள். அவனை எந்த வழியிலேனும் நல்வழிப்படுத்தி இவ்வேசி வலையிலிருந்து நீக்கிப் பிரித்து விடுவதற்கான மார்க்கத்தைத் தேடவேண்டுமென்கிற ஓர் தீவிரமான எண்ணம் உதித்து விட்டது. அவ்வெண்ணத்தினால் அவள் அதே யோசனையிலிருந்து ஓர் தீர்மானம் செய்துகொண்டாள். க்ருஷ்ணசாமியின் ஆபீஸில் அவனுக்கு மேல் அதிகாரியாயுள்ள ஒருவர் அருகிலிருப்பது அவளுடைய நினைவிற்கு வந்தது. உடனே அம்படந்தை தனது அண்ணன் வீட்டிற்குச் சென்றாள்.

மனைவியைப் பறிகொடுத்துவிட்டு மனந்தவிக்கும் மதன கோபாலன் தன் காதலியின் புகைப் படத்தை வைத்துக் கொண்டு தன்னிலையழிந்து "என் கண்மணி! பானு! நான் உன்னை ஒருக் கணமும் மறவாது எண்ணி எண்ணி உருகும் என் தேகம் முற்றும் அங்குலக் கணக்காக வாடி, உயிர் தத்தளிக்கின்றதே! என்னைப் பற்றி நீ சற்றும் நினைக்கவே இல்லையே! என் அன்புக் குரிய அணங்கே! என்னை சிக்கிரத்தில் அழைத்துக் கொண்டு உன்னருகில் வைத்துக் கொள்ள மாட்டாயா! ஐயோ! என்னால் இத்துயரத்தை, இப்பிரிவாற்றாச் சங்கடத்தைப் பொறுக்கக் கூட வில்லையே! என்ன செய்வேன்? என்னமுதச் சுடரே! பானுமதி! பானுமதி!

ஆருயிரே! அன்பே! அருமருந்தே! ஆயிழையே!
பேரருளே! கண்ணே! பிணைமானே—சோர் குழலாய்
செங்கரும்பே! தேனே! சிறியேனுயிர் பிழைக்க
இங்கருள்வா யின்றே இனி.

(ஸ்ரீ வீரராகவ கவி)

தம்மிடத்தில் ஓர் கோபுரமளவுக்கு வேண்டிய தீய விஷயங்களை அடக்கிக் கொண்டு குற்றமற்ற பிறர்மீது மனந்துணிந்து, நா கூசாது, அபாண்ட பாறையைப் பிரட்டிவந்து விடுகிறார்கள் சிலர். குப்பைக் கூடையை வைத்துக் கொண்டு புஷ்பக் கூடையை ஆராய்வதா?

உன்னை நான் மீண்டும் உயிருடன் காண்பேனு! இனிமேலா! எது? என்னுயிரும் அவ்விடத்திற்குச் சென்றுலொழிய நான் கண்மணியின் கமல முகத்தைக் காண்பதேது? கமல முகமென்றால் என் பானுமதிக்கே தகும் என் கண்ணே! உன்

> கண்ணுங் கமலம்: கருது முகங் கமலம்;
> பண்ணுலவு வாயும் படர்க்கமலம்:—தண்ணளிசேர்
> கையுங் கமலம்; கடிக்கமலந் தாள்களுமே!
> எய்யுமிடை ஏந்திழையாட் கிங்கு.

(ஸ்ரீ வீராகவ கவி)

உன்னுடைய ஒவ்வொரு உறுப்பும் கமலத்தை நாணச் செய்து என்னை மகிழச் செய்ததே! என் அன்பார் பூஷணமே! உன் மேனி முற்றும் கமல மயமாக விருந்ததே யன்றி அதன் நிறமோ ஆயிரம் மாற்றுடைய அரிய தங்கத்தை உருக்கி வார்த்த பதுமை போலல்லவா விளங்கிற்று. தங்கக் கமலத்தை யொத்த செங்கரும்பைப் பற்றி நான் எவ்விதம் தான் மறப்பேன்? என்ன ஜோதி! என்ன தேஜஸ்!

> மாதங்கம் மேனி; வளர் தனமும் மாதங்கம்;
> மாதங்கம் மென்குறங்கும் வாயுமே—மாதங்கம்
> பூணும் மணியும் பொறிசுணங்கு மாதங்கம்;
> நாணுடைய மாதர் நலம்.

(ஸ்ரீ வீராகவ கவி)

அத்தகைய தங்கக் கமலத்தை அரை கொடியில் தணலாக்கி விட்டுப் பாவி நான் தழைத்திருக்கிறேனே! ஐயோ! என் போன்ற கன்னெஞ்சக்காரச் சண்டாளர்கள் புவியிலுண்டா! ஹா! என் கண்ணே!

வேசியுடன் குலாவும் மகத்துவத்தில் மனைவி எடுத்துரைத்த மொழிகளெல்லாம் வேம்பு போலாயின. அவ்வுத்தமி உயிர் நீத்த பிறகு செத்தவர் கண் செந்தாமரை என்பது போல அவளைப்பற்றி வெட்கமின்றித் தோத்திரம் செய்ய ஆரம்பித்து விடுகிறார். மண்ணுலகை விட்டு மாயமாய் மறைந்த அம்மங்கையின் மனம் இம் மொழிகளால் மகிழுமா? துயரத்துடன் மடிந்தது மடிந்தது தானே.

கண்ணே! என்னுயிர் மட்டும் நீங்கவில்லையே யன்றி என் வலிமை குறைந்து, பெருமை யகன்றது. இன்பம் ஏகியது. துன்பம் துணையாயிற்று. மனக்களிப்பு மறைந்தது. உலகப் பற்று அற்றது. உற்றார் உறவினர் பாசம் ஒழிந்தது. பணவாசை பறந்தது. அன்னம் வெறுத்தது. உன்னையே எண்ணி உருகிக் கண்ணீர் வடிந்து என் கண்களின் ஜோதியும் குறையத் தலைப்பட்டது. என் வீரம் ஒளிந்தது. எல்லாம் தீர்ந்தது. இப் பாழுடலை விட்டு ஆவி மட்டும் நீங்க வில்லையே! நான் என்ன செய்வேன்? என் பானுமதி! பேசாது மவுனமாக என் காத்தில் வீற்றிருக்கிறாயே, ஒரு வார்த்தை பேசலாகாதா! என்ன செய்வேன்?" என்று விசனம் தாங்காது புலம்பிக் கொண்டிருக்கையில் ரங்கமணி அங்கு வந்து தனது தமயனின் நிலைமையைத் தூர விருந்து கண்டாள். அவள் மனமும் பாகா யுருகிற்று. "ஐயோ! கடவுளே! இவ்வித சோதனையை ஏன் செய்கிறாய்? ஒற்றுமையான தம்பதிகளைப் பிரித்து பரிதபிக்கச் செய்வது, விரோதமான—தினம் சண்டையிட்டு மண்டையை உடைத்துக் கொள்ளும்— தம்பதிகளைத் தாய்வீடு செல்வதற்குக்கூட பிரிக்காது வைத்து ஆட்டுவதும், வேசிக் கள்ளனையும், குடிகாரனையும் உள்ள கணவனுக்கு மகா சாந்தமும் நல்லொழுக்கமும் உள்ள மனையாளைக் கூட்டி வைப்பதும், இதென்ன லீலையோ! இவ்விதம் வயிறெரியச் செய்வதா உனக்கு ஆநந்தம்? ஐயோ! பாவிகள் பெற்ற நாங்கள் மூவரும் மூன்று விதமாக வருந்தி மடிவதற்கா வரம் பெற்று வந்தோம். என்ன அநியாயம்! அண்ணனின் நிலைமையில் அடிக்கடி நாங்களும் சென்று தொந்தரவு செய்வது நியாயமா? அவர் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் மனத்தை யுருக்குகின்றனவே! அவர் மனம் எத்தகைய துயரத்தை—வேதனையை—அடைந்திருந்தால்

ஒரு மனிதன் ஆதியில் கள்ளநேசம் கொண்டு நட்பாயிருந்து, பிறகு இடையில் பிரிந்து யோகிபோல வேஷம் பூண்டு உலாவிவரும் தருணத்தில் அப்பழய நங்கையைச் சந்திக்க நேருங்கால் யோக வேஷமெல்லாம் பறந்து, போக சிந்தையே பிறந்து, இருவிழிகளையும் திறந்து அக்கள்ளியினருகில் இருந்து, பழைய கதைகளை நினைந்து, பேசமனமுவந்து, ஆசைமிக மிகுந்து முகத்தில் அசட்டுத் தன்மை வந்து மூடிவிடுகின்றது. அதைக்களைய யாராலாகும்?

இவ்விதமான வார்த்தைகள் வரும். உயிர் போகவில்லை என்று வருந்துகிறாரே யன்றி உலகத்திலிருக்க வேண்டுமென்று எள்ளளவும் நினைக்கவில்லையே! இவர் மனத்தை மாற்றுவதென்பது இனிமேல் மும்மூர்த்திகள் வந்தாலும் ஆகாது போலிருக்கின்றதே! என்ன ஆச்சரியம்! நாம் இப்போது இவரிடம் எவ்விதம் விஷயத்தைத் தெரிவிப்பது?'' என்று பலவிதமாக எண்ணி வருந்திய வாறு சற்று நின்றாள். பிறகு தன்னைத் தான் தேற்றிக் கொண்டு வெகு விசனத்துடன் மதனகோபாலனினருகில் வந்து நின்றாள்.

மதனகோபாலனுக்கோ அப்போது ஆகாயம், பூமி என்பதே தெரியாமலிருந்தது. ரங்கமணி மெல்ல "அண்ணா! அண்ணா!'' என்று அழைத்தாள். பிறகு கண்ணைத் திறந்து பார்த்த மதனகோபாலன், "என்னம்மா ரங்கமணீ! உன்னுடைய வருகையை நோக்குங்கால் என்ன விஷயத்தைக் கொண்டுவந்து விட்டாயோ என்று பயமாக விருக்கிறது. என்ன செய்தி?'' என்று விசனத்தோடு விசனமாகக் கேட்டான்.

ரங்க:—அண்ணா! விஷய மில்லாதுகூட நான் வருகிறேனா! வாவர வீட்டில் உபத்திரவம் அதிகரித்துவிட்டது. அவர் வீட்டைக் கவனிப்பதே இல்லை. ஆபீஸ் வேலைகளையும் அவர் கவனிப்ப தில்லை. வேலைகள் கட்டு கட்டாக அப்படியே கிடக்கின்றன. அவருக்கு நான் எத்தனையோ நல்வழியில் நீதிகளை எடுத்துக் கூறியும் அவர் அவற்றைச் சிறிதும் செவியில் கொள்ளவில்லை. என்னால் கூடிய வரையில் பிரயத்தனம் செய்ததெல்லாம் வீணாகிவிட்டது. அவர் அந்த தாசியின் மோகத்தி லீடுபட்டு மயங்கித் தன்னுடைய சொந்த காரியங்களையும், கௌரவத்தையும் அடியோடு மறந்து விட்டார். ஆகையினால் நான் குடும்பத்தில் மிகவும் கஷ்டப்படுகிறேன். என்னுடைய மனத்தில் என்ன தோன்றுகின்றதென்

ஒருவர் தாம் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு வருத்தமுற்ற பிறகும் அக்குற்றத்தைப் பற்றியே எடுத்துக் காட்டி சுடுசரம்போலப் பேசிக்கொண்டு வந்தால் அக்குற்ற மிழைத்த மனிதரின் வாயடைத்துப் பிறர்களைப்பற்றி அனாவசியமாகப் பேசாதிருப்பார். அதற்கு இதுவே வழி.

ளால், எப்படியாவது அவரை இவ் வூரிலிருந்து வேறு ஊருக்கு மாற்றலாகும்படிச் செய்துவிட்டால் அதன் பிறகு இந்த தாசியை விட்டு விலக நேரும். அதன்மேலாவது என் குடும்பம் சீர்படும் என்று நினைக்கிறேன். இதற்கு உங்களுடைய யோசனையைப் பற்றிக் கேட்கலாம் என்று வந்தேன்'' என்றாள்.

இதுகேட்ட மதனகோபாலன் அதை ஆமோதித்து அப்படியே செய்யலாம் என்று கூறி அவளையும் அழைத்துக்கொண்டு கிருஷ்ணசாமியின் ஆபீஸ் அதிகாரி யிருக்கும் வீட்டிற்கே சென்று அவரை வணங்கி நின்றார்கள். அவர்களைக் கண்ட அதிகாரி நீங்கள் யார்! எங்கிருந்து வந்தீர்கள்?'' என்ன விஷயம்?'' என்று விசாரித்தார்.

ரங்க:—ஐயா! தங்கள் தயவையே நாடி வந்திருக்கிறோம். ஏழையாகிய எங்கள்மீது தயவு செய்து ஒரு உபகாரம் செய்ய வேண்டும். இவர் எனது தமயனார். என் புருஷர், (கிருஷ்ணசாமி என்பவர்) உங்கள் ஆபீஸில் வேலையாக விருக்கிறார். எங்களுக்கு வரும் சொல்ப சம்பளம் குடும்பம் நடத்தப் போத வில்லை. இப்பட்டின வாஸத்தில் எல்லாப் பண்டங்களும் அசாத்யமான விலையாக விருக்கின்றன. அவைகளை வாங்கி ஜீவிக்க எங்கள் வருவாய் மிகவும் போதாமலிருக்கிறது; ஆகையினால் இவ்வூரை விட்டு எங்களை வேறு நாட்டுப்புறம் போன்ற ஊருக்கு மாற்றி விட்டால் காய்கறி வகைகள், தயிர், பால், இலை முதலிய சாமான்கள் சற்று நயமாகக் கிடைக்கும். சமுசாரம் கஷ்டமின்றிச் செய்து ஜீவிக்கலாம். அதைத் தெரிவிக்கும் பொருட்டே உங்களைக் காண வந்தேன்.

அதிகாரி:—அம்மா! உன் மொழிகளை அறிந்தேன். உன் புருஷனின் பேரில் நான் புகார் சொல்வதற்கு நீ வெறுக்காதே! உன் புரு

மனைவி உயிருடனிருந்த நாளில் வேசி வீடே வாசம். அவ்வுத்தமி கண்ணும் கண்ணீருமாக நிற்பினும் மனத்தில் உறைப்பதில்லை. அத்தகைய மனைவி இறந்து, தன் தேகமும் தளர்ந்து, வயது முதிர்ந்து, கை வரண்டு, வேசி வெறுத்து விலக்கிய தருணம், இறந்த மனைவியை நினைத்து ஒப்பாரி வைக்கிறார்கள் சிலர். இதென்ன வேடிக்கையோ?

ஷனின் ஊழல்களை நீ உள்ளடக்கி, வேறு வழியில் நீ சாக்குச் சொல்லி என்னிடம் கேட்கும் உன்னறிவை நான் மெச்சுகிறேன். உன் புருஷனுடைய சகலமான நடவடிக்கைகளையும் நான் தெரிந்து கொண்டேன். அது விஷயமாக அவனுக்கு வேலை போய் விடும் நிலைமையும் வந்து விட்டது. ஆபீஸ் வேலைகள் அப்படியே நின்று விட்டன. அதையவன் சற்றும் கவனிக்காமையினால் ஆபீஸ் மேலதிகாரி வரையில் அவ்விஷயம் தெரிந்துவிட்டதால் அவர் ஆபீஸ் கணக்குகளைக் கேட்டார். அவனுடைய வேலையே தடைப்பட்டிருப்பதால் அவனை வேலையிலிருந்து நீக்கிவிடும்படியாக ஆர்டர் இன்று வந்திருக்கிறது; இதோ பாருங்கள். அது விஷயமாகத்தான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன்—என்றார்.

இதைக் கேட்டதும் ரங்கமணிக்கும், மதனகோபாலனுக்கும் பெருத்த கலக்கம் உண்டாகி விட்டது. இவ்விதமாக நேரும் என்பதை அவர்கள் சற்றும் எதிர் பார்க்கவில்லை யாகையினால் அம்மொழி அவர்களை பெரிதும் வாட்டி விட்டது. ரங்கமணி அந்த அதிகாரியை நோக்கி "ஐயா! நான் உங்களுக்குக் கூறவேண்டுவது ஒன்றுமில்லை. உங்கள் பெண்போல என்னை நினைத்து எனக்கு அரைவயிற்றுக் கஞ்சிக்காவது ஏற்பாடு செய்ய வேண்டும். என் ஏழைக்குடும்பத்தைத் தாங்கள் தான் ஆதரிக்க வேண்டும். என்னுடைய கணவரின் ஊழல்களை நான் எவ்வளவு கண்டறிந்திருந்த போதிலும் அவற்றை நான் எவ்விதம் பிறரிடம் கூறுவேன்! நான் இவ்வூரை விட்டுப் போக வேண்டுமென்று கேட்டது அப்பாவி தாசியின் சம்பந்தம் ஒழிக்கும் பொருட்டாகத்தான். அந்த விஷயத்தில் தாங்கள் தயவு செய்து என்னைக் காப்பாற்ற வேண்டும். நான் எத்தனையோ விதத்தில் என் கணவரின் காலில் விழுந்து எடுத்துக் கூறிய யாவும் வீணாகி விட்டன. என் மனமும், வயிறும் சதா யந்திரம் வைத்து வேலை செய்து கொண்டிருக்கின்றன. என் இரு குழந்தைகளையும்

சிலரை நித்திரையில் எழுப்பினால் தேகமின்னதென்று தெரியாது மது பானம் செய்தவர் போல மயங்கி, தாறு மாறாக விழுந்து, பேசுவதைச் செவியில் வாங்காது கண்மூடிச் சாமியாராக உலாவுகின்றார்கள்.| அதைப் பார்ப்பவர்களுக்கு நகைப்பாக இருக்கின்றது.

வைத்துக்கொண்டு தனிமையில் கிடக்கின்றேன். இரவு நேரத்தில் வீட்டில் துணையில்லாமல் நான் தூங்குவதே இல்லை. மனத்தில் பயம் திக்கு திக்கு என்றடித்துக் கொள்கிறது. எங்கேனும் பூனை, எலி முதலியன ஓசை செய்தால் அப்போது அலறி எழுந்து விடுகிறேன். என் கஷ்டம் ஒன்றிரண்டல்ல. இதை எவ்விதமாயினும் தாங்கள் நீக்கவேண்டும்'' என்று கெஞ்சிக்கேட்டாள்.

அதைக்கேட்ட அதிகாரி ''அம்மா! இந்த விஷயத்தில் நான் செய்வதற்கு ஒன்றுமில்லை. மேல் அதிகாரி வரையில் செய்தி எட்டி விட்டது. இனி என்னால் கூடிய வரையில் முயன்று என்ன வழி செய்யக் கூடுமோ பார்க்கிறேன். நான் என்ன செய்வேன்? உன்னுடைய சரித்திரம் மிகவும் வருத்தமாக விருக்கிறது. உறுதி மொழி கூறக் கூடிய நிலைமையில் நான் இல்லை. ஏதோ என்னால் கூடிய உதவியைச் செய்கிறேன்.'' என்றார். இதைக் கேட்ட இருவரும் வந்தனம் செய்துவிட்டு வீடு திரும்பினார்கள். ரங்கமணியின் மனத்தில் இந்த விஷயமான கவலை பெரிதும் போராடத் தொடங்கிவிட்டது. அன்று தன் புருஷன் போஜனம் செய்கையில் மெல்ல அவனை நோக்கி ''நாதா! நீங்கள் எத்தனை தான் என்னை விலக்கி இருப்பினும் உங்களுடைய சுக துக்கத்திற்குப் பாத்யதை உடையவள் நானேயன்றி அந்த முண்டை அம்ருதபாஷிணி அருகதையல்ல. அவள் உறவு எம்மட்டும் தெரியுமா!

நாவாறவேண்டும் விதம் சொல்லுவாருனை நான் பிரிந்தாற்
சாவேனென்றே யிருந் தோக்க வுண்பார்கள் கைதான் வரண்டாற்
போய்வாரு மென்று நடுத்தலைக்கே குட்டும் பூவையருக்
கீவார் தலைவிதியோ விறைவா கச்சி யேகம்பனே

(பட்டினத்தார்)

சிலர் தாம் ஆதியில் வைத்திருந்த வைப்பாட்டியின் பெயரைச் சொல்லும் போதே பல்லைப் பிளந்து விடுகிறார்கள். அவர்களைப் பற்றி விவரமாகப் பேசினாலோ ஆனந்தப் பரவசமுறுகின்றார்கள். அதற்கு மேலும் சம்பாஷணை பிறக்குங்கால் முன் நடந்த யாவற்றையும் பெருமையுடன் மழைபொழிவது போல தடதடவெனக் கொட்டி விடுகிறார்கள். இதென்ன தமாஷ் பாருங்கள்.

இவ்விதமான மாயப் பிசாசியின் மயக்கத்தி லீடுபட்டு உங்கள் பெயரையும் கண்ணியத்தையும் போக்கிக் கொள்ளலாகுமா! முன்பு எல்லாம் ஆபீஸ் வேலையை ஓயாது வீட்டிலேயே செய்து கட்டு கட்டாக அனுப்புவீர்களே! இப்போது இத்தனை நாளாக ஒரு கட்டுக்கூட பிரிக்க வில்லையே! அதென்ன? அவ்வாறு உத்யோகத் தில் வேலை தவக்கமானால் அது தப்பிதமல்லவா! உங்களுக்கு அது தெரியாதா! எந்த காலத்தில் எந்த வேலை நடக்க வேண்டுமோ அதைச் செவ்வனே செய்தனுப்பாது பாவி தாசியின் மீது மயக் குண்டு வீற்றிருந்தால் நம் கதி யாதாவது? என் வயிறு பற்றி எரி கின்றதே!'' என்று அவள் கூறுவதைக் கேட்ட க்ருஷ்ணசாமிக்குக் கோபம் பொங்கிவிட்டது. கையில் இருந்த அன்னத்தை வாரி இறைத்தான். வீடு பூராவும் எச்சிலை அள்ளிக் கொட்டி விட்டு ‘‘சீச்சீ! உன்னுடைய உபத்திரவம் பொறுக்கக் கூடவில்லை. எனக்குப் பதி லாக நீ தலைப்பாகை யணிந்து சென்று உத்யோகம் பார்த்துவிடுவாய் போலிருக்கிறது. உத்யோகசாலையின் பாரம் உன் தலையிலா கூத்தாடுகிறது? அந்த விஷயத்திற்கு நீ எனக்குப் புத்தி கூற வர வேண்டாம். உன் வேலையைக் கவனித்துச் செல். வீட்டில் எந்த நேரம் பார்த்தாலும் ரோதனையே பெரிதாகிவிட்டது.'' என்று கூறிக் கொண்டே கையை உதறிவிட்டு எழுந்தான்.

ரங்கமணி வழி மறித்துக் கொண்டு, ‘‘நாதா! நீங்கள் சொல் கிறபடியே நான் தலைப்பாகை தரித்து உத்தியோகம் செய்தால் அதில் ஈனமில்லை. ஆண்பாடும், பெண்பாடும்பட்டுத்தன் குடித்தனத் திற்குழைத்து வருகிறாள் என்கிற புகழே எனக்கு வரும். உங்களைப்போன்று தாசி வீடு செல்வது போன்ற இகழ்ச்சி இதில் ஒரு போதுமில்லை. தங்களுடைய நலனைக்கோரி நான் தங்களிடம் போராடுகின்றேனே யன்றி வேறில்லை. உங்களுடைய நடத்தையையும்,

---

சிலர் ‘‘நான் அந்த ஊரில் அப்படியிருந்தேன்; எனக்கு அவ்வளவு மரியாதை நடந்தது. இந்த ஊரில் இப்படி யிருந்தேன்; இவ்வளவு மரியாதை நடந்தது.'' என்று வாய்ப்பறை சாற்றுகின்றார்கள். அவர்கள் தற்போதுள்ள இடத்திலோ ஒருவித ஏற்றத்தையும் காணவில்லை. முற்கூறியவையெல்லாம் பெருமையோ, வெறுமையோ தெரியவில்லை.

நீங்கள் என்னை நடத்திவரும் சிறுமையையும் நினைத்தால் நான் இப் பாழ் உடலைச் சுமந்துகொண்டு இப் பூமிக்குப் பாரமாக இருக்க வேண்டாம். நான் உயிருடனிருப்பது என்னலத்தைக் கோரி யல்ல. என் பாவிப் பிறப்பை சிருஷ்டித்ததுடனில்லாமல் அக் கடவுள் என் வயிற்றில் இரு குழந்தைகளையும் ஜெனிக்கச் செய்து விட்டாரே! அந்தக் குழந்தைகளின் பரிதாபத்தையும், திக்கற்றத் தன்மையையும் உத்தேசித்து நான் உயிர் வாழ்கிறேன். என் சந்தோஷம் பொங்குவதாலும், மனம் சதா ஆனந்தமயமாக விருப்பதாலும், நான் உலகத்தவரைப் போல;இன்பமாக வாழ்வதாலும் நான் இப்புவியில் இருக்கவில்லை என்பதை உறுதியாக நம்புங்கள். நான் உங்கள் பொருட்டும் இல்லை. ஏனெனில் அக்கினி சாட்சியாக மணந்த மனைவி என்பதை அறவே மறந்து என்னை வெள்ளாட்டி யென்று மதித்துக் கேவலம் ஈனத்தொழிலை இன்பமாக நடத்தும் வேசிக்கு அடிமையாகி அவளையே தர்மபத்தினியாக நம்பி வாழும் உங்களுக்கு நான் இனி அனாவசியம். அம்ருதபாஷிணி உயிர் தரித்திருக்கும் வரையில் உங்களுக்கு யாதொரு குறைவு மில்லை. என் முடிவினால் யாருக்குத் துன்பம் எனில் என்னிரு கண்களுக்கும் தான். "தாயற்ற தகப்பன் தாயாதி" என்பது பழமொழி. தாய் இருக்கும்போதே நீங்கள் தாயாதியாகி விட்டீர்கள். என்னுடைய கட்டை இருப்பதால் அக் குழந்தைகளுக்கு செல்வாக்கும் சிறப்பும் இல்லாவிடினும் அரை வயிற்றுக்கான கஞ்சியையேனும் நான் வேளா வேளையில் வார்த்து என் குழந்தைகளைப் பசியினால் வருந்த விடாது பார்த்துக்கொள்கிறேன். உங்களுடைய அக்ரமத்தை எண்ணி நான் உயிர் நீத்தால் "ஐயோ! என் குழந்தைகளின் கதி என்னவாகும்? பசி என்றழுதால் பார்க்க மனிதருண்டா! தலைவலி என்றழுதால் தழுவ மனிதருண்டா! பரதேசிகளைப் போன்று கதறினால் பிரியத்துடன் அழைக்க மனிதருண்டா! அன்

சற்று நேரமாவது கவலையற்றிருக்கலாமென்ற எண்ணத்துடன் ஒரு சங்கீதக் கச்சேரிக்கோ, நாடகத்திற்கோ சென்றாலும் கூட அழைத்துச் சென்றிருக்கும் குழந்தை எதற்காகவாவது அழுதால் அங்கும் புதிய கவலை உண்டாகி மன அமைதி குறைந்து, சங்கடப்படவேண்டி நேருகின்றது.

னத்திற்கு என்ன பாடு படவேண்டுமோ! உடைக்கு எவ்விதம் உருக வேண்டுமோ! என் குழந்தையை யார் "நாயே!" என்பார்களோ! யார் "பேயே!" என்பார்களோ! யார் உதாசீனமாகக் கூறி உதைத்துத் தள்ளுவார்களோ? எந்த நேரத்தில் எந்த கதியை அடையுமோ! உங்கள் அன்புதான் தெரிந்தே இருக்கிறது. நீங்கள் வேசியிடம் கொண்டுள்ள மோகத்தில் என் குழந்தைகளையும் வேசிக்கு அடிமை யாக்கிவிடுவீர்கள். என் குழந்தைகளின் கதி இன்ன விதமாக முடியும் என்பதை நன்கு உணர்ந்தும் நான் தற்கொலை புரிந்துகொண்டு குழந்தைகளை பரதேசியாக்க—அனாதையாக்க — மனந் துணிய வில்லை. கடவுளே என்னைக் கண்டு எடுத்துச் சென்றுவிட்டால் அவர்களின் தலையெழுத்து எனலாம். என் மனமறிந்து செய்ய மனந் துணியாமல் உங்களுடைய அட்டூழியங்களை சகித்துக் கொண்டு உயிர் வாழுகிறேன். இன்னும் மிஞ்சிவிட்டால் என்ன தான் நடக்குமோ! நல்லதங்காளைப் போன்று நான் குழந்தைக ளோடு மடிய நேருமோ! என்ன கதி யடைய நேருமோ! எனக்கே தெரியவில்லை. மக்களைப் பெற்றோருக்கு மக்கள் அருமை தெரியா விடின் மற்றோரைக் கூறவேண்டுமா! உங்களுடைய செய்கை உங்களுக்குத் தெரியாவிடின் நான் எடுத்துரைப்பதைக் கேட்டேனும் இத்தீய பழக்கத்திலிருந்து திருந்தவேண்டாமா? நாதா! என் மொழி யைக் கேளுங்கள்" என்று பின்னும் ஏதேதோ பேசவா யெடுத்தாள்.

அதற்குள் கிருஷ்ணன் இடை மறுத்து "என்ன! என்ன! வெகு துணிச்சலுடன் பேச வாரம்பித்துவிட்டாய். நீ இருக்கும் நிலைமையை நன்றாகத் தெரிந்துகொண்டு பேசு. உன்னுடைய இந்த அதிகப்பிரஸங்கத்தைக் கேட்க நான் தயாராக வில்லை. சிச்சீ! விலகிச் செல். மகா குழந்தைகளைப் படைத்துவிட்டாய். பெருமை

சிலர் "நமக்குக் கடவுள் குழந்தைகளை அளிக்கவில்லையே" யென்று குறைப் படுகிறார்கள். சிலர் "நமக்குத்தான் குழந்தைகளில்லையே, நாம் சம்சார சாகரத்தி லுழலாமல் பகவானைத் தியானித்துக் கடைத்தேறுவோ மென்றிராமல், இதர குழந்தைகளிடத்தில் அதிக பாசம் வைத்து, அவற்றிற்கு நேரும் கஷ்டங்களைக் கண்டு, மனங்கலங்கி நெஞ்சம் அடிக்கிறார்கள்.

பிதற்றுகிறாய். வெட்கங் கெட்டவளே! உன்னால்தான் உலகமே இருக்கிறது. இல்லையேல் அழிந்துவிடும்போலிருக்கிறது. ''போ விலகி.'' என்று கண்டிதமாகப் பேசிக் கொண்டே வெளியில் சென்று விட்டான். சில நாட்கள் சென்றன. பிறகு ஒரு தினம் ஆபீஸ் அதிகாரியிடமிருந்து, அவனுடைய வேலைகளை எல்லாம்--கட்டுக்களை எல்லாம் — ஒழுங்காகக் கொண்டுவரும்படியாக உத்தரவு வந்தது. அப்போதே விழித்துக் கொண்டான். எல்லாக் கட்டுக்களும் அப்படியே இருப்பதை யறிந்து திடுக்கிட்டான்; நடுங்கினான். என்ன ஆபத்து வந்துவிடுமோ என்று திகிலடைந்தான். அது விஷயமாக அதிகாரிக்கும் அவனுக்கும் முறைப்படிக்கு விவகாரம் நடந்தது. பிறகு கிருஷ்ணனுடைய சம்பளத்தில் 25 ரூபாயைக் குறைத்துவிட்டதோடு, அவனை இவ் வூரிலிருந்து வேறு ஊருக்கு மாற்றிவிட்டார்கள். இதை யறிந்த கிருஷ்ணனுக்கு ''ஐயோ! பணம் 25 குறைந்துவிட்டதே'' என்கிற துக்கம் ஒருபுறம்; வேலையில் தனக்கொரு இழிவான பெயர் வந்துவிட்டதே என்கிற அவமானம் ஒரு புறம். எல்லாவற்றையும் விட அம்ருதபாஷிணியை விட்டுப் பிரியும்படியான போதாக் காலம் வந்துவிட்டதே! என்கிற குறை பெருங் குறையாக ஆகி அவன் வருந்த வாரம்பித்தான். ''நான் என்ன செய்வது. இவ்விதம் திடீரென்று உத்தரவு வந்துவிட்டதே அம்ருதபாஷிணியைப் பிரிவதா! ஆபீஸ் வேலையை விடுவதா!'' என்கிறபெருங் கவலையும், பீதியும் அவன் மனத்தில் போராடத் தொடங்கிவிட்டன.

நாம் ஒருவர் வீட்டிற்குச் செல்ல நினைத்துப் பாதி வழி வருகையில், அவ் வீட்டைச் சேர்ந்தவரை அகஸ்மாத்தாகச் சந்தித்து, அவருடனேயே சென்றால் அங்குள்ளோர் நாம் ஏதோ முன்னேற்பாட்டுடன் வந்ததாக நினைக்க இடமுண்டாகின்றது. சில சமயங்களில் உண்மையாக நடக்கும் விஷயங்களும் உண்மையன்று போன்று தோன்றுகின்றன.

ஒருவரிடம் சில விஷங்களைக்கூறி, நமக்கு வேண்டியவர்களிடம் தெரிவிக்கும்படிச் சொல்லியனுப்பினால். அவர் முக்கியமானவற்றை விட்டுவிட்டு மற்றதைச் சொல்லுகிறார். சில சமயம் நாம் சொன்னதற்கு நேர் விரோதமானவற்றைச் சொல்லிவிடுவதால் அநாவசியமான மனஸ்தாப முண்டாகின்றது. ஆகையால் நாம் தெரிவிக்க வேண்டுவதை எழுதியனுப்பி விடுவது உசிதமானது.

Only a few copies *In stock*

RUKMINI KANTHAN

The Latest Detective Novel with full of thrilling situations

by Mrs. V. M. Kothainayaki Ammal

Price Rs. 2.

For our subscribers ***Rs. 1-12 only***

Postfree on receipt of the amount; get your copy now before the stock is exhausted.

HINDU (14—4—1931)

This Tamil novel combines both love and detective interests. The heroine Rukmini is a motherless girl and her father is suddenly arrested on a baseless charge of misappropriation of the funds belonging to the Bank where she is employed. Other complications set in; but Lakshmi-kanthan, the amiable doctor, who lives as a neighbour, comes to the rescue of the heroine; and he, along with her lover Jayakanthan the detective Rajaram Naidu and his able wife serves to discover and thwart the intentions of a group of conspirators. Both the detective and the criminals are old familiar characters portrayed in other novels of the authoress. *The authoress commands a spirited style of narration.*

தபாற் செலவு

இனம்! இனம்!!

ஒரு சந்தோஷச் செய்தி

நமது சந்தா நேயர்களில் பலர், நமது புத்தகங்களை வாங்கும் போது, தங்களுக்கு வேண்டிய இதர புத்தகங்களையும் அனுப்பும் படி கேட்டுக்கொள்கிறார்கள். நாம் வேறு புத்தகங்களைக் கையில் வைத்துக்கொள்வதில்லை யாகையால், மற்றவற்றை அனுப்ப முடியா தென்று எழுதவேண்டி யிருக்கிறது. அநேக நேயர்கள், தங்க ளுக்கு வேண்டிய புத்தகங்களை தனித்தனியாக ஒவ்வொரு புத்தக சாலையினின்றும் வரவழைப்பதென்றால் தங்களுக்கு அதிக தபாற் செலவு ஏற்படுகிறதென்று எழுதுவதால், எல்லோருடைய சௌகரி யத்தையும் உத்தேசித்து இனிமேல் நமது சந்தா நேயர்கள் கேட்கும் புத்தகங்களை வாங்கி யனுப்பத் தகுந்த ஏற்பாடு செய்துள்ளோம். ஆகையால் நேயர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களின் விவர மும், அவற்றின் முழு கிரயமும் முன் பணமாக அனுப்பினால் அவற்றை தபாற் செலவில்லாமல் அனுப்புகிறோம். ஐந்து ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கே தபாற் செலவில்லாமல் அனுப்ப முடியு மாதலால், அதற்குக் குறைந்த ஆர்டர் செய்பவர்கள் நான்கணா சேர்த்து அனுப்பவும். இந்த ஏற்பாட்டின்படி வி. பியில் அனுப்ப முடியாது.

மேற்கண்ட ஏற்பாட்டினால் இனிமேல், நமது சந்தாநேயர் களும், அவர்களது நண்பர்களும் தங்களுக்கு வேண்டிய சகல புத்த கங்களை தபாற் செலவும், வீண் அலைச்சலுமின்றி பெற்றுக்கொள்ள முடியு மென்பதைக் கவனிக்கக் கோருகின்றோம்

மானேஜர்.

சிறந்த தமிழ் நூல்கள்.

தமிழ் நாவல்கள்.

	ரூ	
சிவஞானம்	1	4
ஞானப்பிரகாசம்	1	8
ஞானசம்பந்தம்	1	4
கமலாக்ஷி	1	12
விஜயசுந்தரம்	2	0
காதம்பரி	1	8
மேகசந்தேசம்	0	14
நமது பங்கஜம்	1	8
பன்னீர் செல்வம்	1	0
சவடால் சம்பந்தம்	1	0
தருமசீலன்	1	0
இரத்னம்பாள்	1	0
பரிமளா	1	0

ஜகன்மோகினி ஆபீஸ் தோடித் தெரு, திருவல்லிக்கேணி சென்னை.

நீல அரண்மனை	1	4	கனகமணி	2	12
விஜயபாஸ்கரன்	2	0	சந்திரரேகை	2	0
விக்கிரமசிங்கன் கோட்டை	1	0	பத்மாக்ஷி	2	0
ஷண்முகசுந்தரம்	2	0	கனகாங்கி	2	0
இருபடுகொலை	0	12	சுந்தரி மனோஹரன்	1	8
விஷத்தாம்பூலம்	0	12	மாயாசுந்தரி	0	12
பத்மாமணி	1	0	அமிர்தவல்லி	1	0
ரஸாயனக்கள்வன்	0	12	வைதேகி	2	8
அம்புஜாக்ஷி	2	0	பத்மசுந்தரன்	2	8
ஜகதீசன்	1	12	ராதாமணி	2	8
மஞ்சுளா	0	10	சாருலோசனா	2	8
காளிங்கராயன் கோட்டை	4	0	சண்பகவிஜயம்	1	12
விலாசவதி	3	0	கௌரிமுகுந்தன்	1	12
பவளத்தீவு	1	8	கோபாலரத்னம்	0	14
கல்யாணி	0	12	சுகந்தபுஷ்பம்	1	0
ஸ்ரீலோலன்	1	4	நவநீத கிருஷ்ணன்	2	0
அனந்தசாகரன்	0	8	ருக்மணிகாந்தன்	2	0
நாகரிகப்போர்	1	8	சாமளநாதன்	2	0
கயற்கண்ணி	0	12	வீரவஸந்தா	0	8
ஆனந்தமடம்	1	0	மாதவமணி	0	3
அனுமான்சிங்	0	12	கனகபுரி	1	8
அசலாம்பிகை	2	0	மங்கையர்க்கரசிகாதல்	0	12
கிருஷ்ணவேணி	2	0	இரத்னபுரி ரகஸ்யம்	4	0
சித்தாமணி	2	0	தபால்கொள்ளை	0	14
கற்பகசுந்தரி	2	12	ஞானசெல்வாம்பாள்	9	10
எங்கள் ஊர்	1	0	மின்சாரமாயவன்	1	8
இராதை	1	4	கனகபூஷணம்	3	8
சுவர்ணசுந்தரம்	2	0	இந்திராபாய்	2	8
திக்கற்ற இரு குழந்தைகள்	1	8	மஞ்சளறை மர்மம்	1	8
தலையணை மந்திரம்	1	0	விளையாட்டு சாமான்	1	6
தீனதயாளு	0	12	மதனாம்பாள்	3	0
வசந்தோத்யானம்	3	0	பத்மாஸனி	0	14
விஜயமார்த்தாண்டம்	1	4	பவளத்தீவு	3	0
குற்றமும் சிக்ஷையும்	1	12	கற்கோட்டை	2	0
முத்து மீனாக்ஷி	0	8	அமராவதி	4	0
உதயலன்	0	12	கமலசேகரன்	1	12
கனகமாலை	1	4	தினகரசுந்தரி	1	0
நவரத்னலாகெட்	0	12	தேவசுந்தரி	1	4
மணிவாசகன்	1	4	ஆனந்தசிங்	2	0
சந்திரசேகரன்	1	0	மாதவி மாதவன்	2	0
காந்திமதி	2	0	பூங்கோதை	0	10
ஷண்முகநாதன்	1	4	வீரநாதன்	0	12
அமிர்தம்	0	8	சுவர்ணாம்பாள்	0	12
கனகாம்பாள்	1	0	கோமளவல்லி	0	8
வீரபத்தினி	1	0	மதனபூஷணம்	1	0
ஸ்வர்ணாம்புஜம்	0	8	கடற்கொள்ளை	3	4
கனகாம்புஜம்	2	12	நவனீதரம்பை	1	0

இராஜாமணி	2	0
அற்புத மர்மங்கள்	1	12
கற்பகச்சோலை	1	4
மலையாளபகவதி	1	0
மனமோகனமாணிக்கம்	1	8
இரத்னபாய்	1	12
பன்னிரு மரகதம்	3	0
விசித்திரத்துப்பறியுங்கண்	3	0
ஆனந்தகதாகல்பகம் 4 வது	3	0
காந்தி உண்மைசீடன்	1	0
ஜயவீரன்	1	12
அங்கயற்கண்ணி	1	12
அம்பலத்தரசன்	1	8
அம்பலவாணன்	1	4
மாணிக்கவல்லி	1	0
அமிர்தகுமாரி	1	4
திருக்கழுக்குன்றக் கொலை	1	8
சாரதை தந்திரம்	0	12
இராமனுதன்	2	12
சுந்தர தீரன்	1	8
ஜடாவல்லவர்	2	8
மதனன் நீதிமதி	1	0
வீரபாகு	1	8
தளுக்குசுந்தரி	1	0
இராஜீவி	1	0
ரெயில் திருடன்	0	10
சாந்திபுரக் கொலை	1	0
மங்களசுந்தரம்	0	12
ஸுவர்ச்சலா	0	8
கள்ளக்காதலன்	2	0
பச்சைமோதிரம்	1	0
பவளப்பதுமை	1	4
மேகாஞ்சனி	1	0
மேனகா	3	0
கும்பகோணம் வக்கீல்	3	0
சௌந்தர கோகிலம்	6	0
மாயாவிநோதப் பரதேசி	5	0
மதனகல்யாணி	4	8
பூர்ணசந்திரோதயம்	7	8
திகம்பரசாமியார் பால்யலீலை	5	0
பாலாமணி	2	8
வஸந்தமல்லிகா	1	8
வித்யாசாகரம்	1	4
லொடபடசிங்	0	12
கமலாம்பாள்	1	8
கப்பற்கொள்ளை	1	4
இராஜராஜேஸ்வரி	1	8

சரோஜினி	2	0
கருங்குயில்குன்றக்கொலை	4	2
வித்யானந்தர்	1	8
ஆனந்தமனோகரன்	1	0
பொற்றொடி	1	2
விசித்திர தேவலோக கோர்ட்	0	8
குடும்பவிநோதக்கதைகள்	2	0
பிரபஞ்சவிநோதக்கதைகள்	1	0

சிறந்த தமிழ் நாடகங்கள்.

இந்திரமோகனா	0	8
இராமானுஜர்	0	8
திலோத்தமா	0	12
திருஞான சம்மந்தர்	0	12
தொண்டரடிப்பொடி	0	5
சங்கராச்சாரியர்	0	5
இராமாமிர்தம்	0	4
சத்யதேவி	1	0
ரோஜாதேவி	1	8
மாணிக்கவாசகர்	0	8
வஸந்த கோகிலம்	1	4

ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியார் நாடகங்களும் கிடைக்கும்.

இராஜீய தேசிய நூல்கள்.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம் 2 பாகம்	4	0
சிவாஜி	1	0
காந்தி விசாரணை	0	4
திலகர்	0	8
சத்திய சோதனை	2	8
மகாத்மா காந்தி	1	8
சமரஸமுயற்சி	0	8
காந்தி சிறை அனுபவம்	0	8
இந்திய ஸ்வராஜ்யம்	0	8
ஐஸ்வரிய சக்கரம்	0	8
ஒற்றுமையாமை ஏன்	0	8
ஒற்றுமையாமை விவரம்	0	4
இந்தியாவும் சுயாட்சியும்	1	8
காந்தி ஆத்மசக்தி	0	10
அசோகசக்கரவர்த்தி	0	8
கும்பமகாராணா	0	6
இராஜராஜசோழன்	0	10
புத்தர் ஜாதகக் கதைகள்	0	10
நெப்போலியன்	1	8
பாரதநாட்டின் நிலைமை	1	0
இந்தியா இழக்கும் தனம்	1	0
இராஜரீக சாஸ்திரம்	1	0

மனிதவாழ்க்கையும் காந்தி யடிகளும்	2	8
ஆதிர்ஷ்ட இந்தியா	2	0
இந்தியபிதா	2	0
மாயாமேயோ	2	0
இந்தியமாதா	1	8
மூகம்மதலி ஷவுக்கதலி	1	0
ஆரோக்யவழி	0	12
சர்க்கா	0	8

வியாபார நூல்கள்.

வர்த்தகக் கணித நூல்	2	0
வியாபாரதந்திரம்	1	8
கைத்தொழில் முறை	1	8
வர்த்தக யுக்தி	0	12
புதிய ஊக்கம்	0	2
திரவியம் திரட்டும் வழி	0	6

வைத்திய நூல்கள்,

ஆரோக்ய சாஸ்திரம்	2	0
மருத்துவ சாஸ்திரம்	2	8
அகஸ்தியர் நயனவிதி	1	4
டெஷி பின் எண்பது	0	12
வைத்தியத் திரட்டு	0	12
ரசகாண்டம்	0	8
சத்வைத்யஜீவனம்	0	8
மதுமேகம்	0	8
க்ஷயரோகம்	0	8
அகஸ்தியர் ரணவைத்தியம்	0	12

21003

வேதாந்த நூல்கள்.

பகவத்கீதை வசனம்	3	0
மதஸ்தாபகர்களின் சரித்திரக்கொத்து	2	8
ஆழ்வார்கள் சரித்திரம்	1	8
சாதனசதுஷ்டயம்	3	8
ஞானக்களஞ்சியம்	3	0
வேதாந்த பாஸ்கரன்	3	0
ஞானயோக ரகஸ்யம்	3	0
அத்யாத்மயோகம்	2	8
ஞானயோகம்	2	4
இராஜயோகம்	2	4
வேதாந்தரகஸ்யம்	2	0
கர்மயோகம்	1	0
பக்தியோகம்	0	12
ஆங்கில ஆசான்	2	0
ஆனந்த ஆங்கில பாஷாபோதினி	2	0

சங்கீத நூல்கள்.

ஸ்ரீ தியாகராஜ ஹ்ருதயம் 3 பாகங்கள்	10	0
ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கீர்த்தனைகள்	3	0
ஸங்கீத ரத்னாவளி	3	0
ஸங்கீதரஸார்ணவம்	2	8
ஸங்கீத சித்ராம்பரி	1	8
ஸங்கீத ஸர்வார்த்த சிந்தாமணி	2	8
பாண்டுரங்கபக்தவிஜயம் 5 பாகங்கள்	6	0
ஜாதக ரகசியம்	5	0

இதர பிரசுரங்கள்.

கௌஹர்ஜான் காதல் 1 & 2 பாகம் பாகம் 1-க்கு	1	8
பண்டிதை மெஸ்மெரிஸா 3-ம் பதிப்பு	1	8
மலை விழுங்கி மகாதேவன்	0	6
லோகாதிசய விளக்கம்	1	4
சுவாசமே உயிர்	1	8
ஜ்யாரத்தின் குபூர்	0	12

இல்வாழ்க்கை சம்பந்தமான புஸ்தகங்கள்

மணவாழ்க்கையின் மர்மங்கள்	2	4
மானிட இரகசிய சாஸ்திரம்	1	0
கருப்ப சாஸ்திரம்	1	8
சரீர மர்ம சாஸ்திரம்	1	0
கொக்கோகம் மூலம்.உரை	1	4
காதல் வாழ்க்கையின் மர்மங்கள்	2	0
சிற்றின்ப வெற்றி	2	4
ஜீவவசிய பரம ரகசியம்	3	0
இல்வாழ்க்கையின் இரகசியங்கள்	2	0
இன்பவாழ்க்கையின் ரகசி	2	0
யங்கள்	2	0
மனோவசிய சாஸ்திரம்	1	8
மதனகாம லீலை	2	0
சிற்றின்ப ஞானசிந்தாமணி	1	4
ஸ்திரிபுருஷ ரகசியம்	1	4
மதன ரதி ரஹஸ்யம்	2	0
விறலி விடு தூது	0	12
முத்தத்தின் மர்மம்	1	8
மங்கையின் முத்தம்	2	0

மேற்கண்ட புத்தகங்களைத் தவிர மற்ற புத்தகங்களையும் அனுப்ப ஏற்பாடு செய்துள்ளோம்.

"ஜகன்மோகினி" யில்
வெளிவந்த நாவல்கள்.

மலர் 1. ஸ்ரீமான் வடூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய

	காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II.	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை

கனகசபை	ரூ.	1	8	0
கோகிலம்	ரூ.	0	6	0

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை

மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் VI.	நவநீதகிருஷ்ணன் ...	ரூ	2	0	0
மலர் VII.	சாருலோசனை (2-பாகங்கள்)	ரூ.	2	0	0
	ருக்மிணீ காந்தன்	ரூ.	2	0	0
	சண்பக விஜயம்	ரூ.	1	12	0
	கௌரீ முகுந்தன்	ரூ.	1	12	0
	சுகந்தபுஷ்பம்	ரூ.	1	0	0
	கோபால ரத்னம் ...	ரூ.	0	14	0
	வீரவஸந்தா	ரூ.	0	8	0
	மாதவமணி	ரூ.	0	3	0

"ஜகன்மோகினி" சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன்	ரூ.	2	0	0
ராதாமணி	ரூ.	2	0	0
சாருலோசனை	ரூ.	2	0	0
நவநீதகிருஷ்ணன்	ரூ.	1	12	0
ருக்மிணீ காந்தன்	ரூ.	1	12	0
சண்பகவிஜயம்	ரூ.	1	8	0
கௌரீமுகுந்தன்	ரூ.	1	8	0

"ஜகன்மோகினி" ஆபீஸ்

26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

இனும் தபாற்செலவு இனும்

ஒரு அணு ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு "போலீஸ் கிலி போதிராயர்" "ராவ்பகதூர் ரஸதுல்லா சாஹிப்" என்னும் இரண்டு நாவல்கள் அனுப்பப்படும்.

வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி.

அமிர்தாஞ்சனம்



எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

40 வருஷங்களாக

"ஜகன்மோகினி" யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.